விலை சதம் 5

"சுதந்திரன்"
விளம்பர விபரங்கள்
சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்.
மானேஜர்,
"சுதந்திரன்"
194 A. தட்டாரத் தெரு கொழும்பு.

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

சுதந்திரன்

THE "SUTANTIRAN."

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE.)

REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவருவது.

பக்கங்கள் 4

"சுதந்திரன்"
(தினப் பதிப்பு)
சந்தா விபரம்

தனிப் பிரதி	சதம்	5
3 மாதச் சந்தா	ரூ	6-00
6 மாதச் சந்தா	„	12-00
1 வருடச் சந்தா	„	24-00

மானேஜர்
"சுதந்திரன்"
194 A. தட்டாரத் தெரு கொழும்பு

Phone: 3411

நாமார்க்கும் குடியல்லோம்

புத்தகம் 1 | கொழும்பு சர்வஜித்து வரு புரட்டாசி 21வ செவ்வாய்க்கிழமை | Colombo, October, 7 1947 | ஹிஜிரி 1366 துல்கஃதா பிறை 21 | இதழ் 126

காஷ்மீரில் போட்டி சர்க்கார்

ஜூனாகத் பற்றி இந்திய சர்க்கார் அறிக்கை

ஐக்கிய மாகாணத்திற்கு அவசரச் சட்டம்

புதுடில்லி, அக் 5

ஐக்கிய மாகாணத்தில் சில கலவரப் பகுதிகளிலுள்ள ராணுவ அதிகாரிகளுக்கு விசேஷ அதிகாரமளித்து இந்திய சர்க்கார் ஒரு அவசரச் சட்டம் பிறப்பித்திருக்கிறார்கள். சமீபத்தில் கிழக்கு பஞ்சாப்புக்கும் டில்லி பிரதேசத்துக்கும் அவசரச் சட்டம் போன்றது. இச்சட்டம் உடனே ஐக்கிய மாகாணமுழுவதற்கும் அமுலாகிறது.

அகதிகள் போக்குவரத்து

லாகூர், அக 6

இன்று கீழ்க்கண்ட சர்க்கார் அறிக்கை வெளியிடப்பட்டது: நேற்று இங்கு பாகிஸ்தான் சர்க்கார் பிரதம மந்திரியும் இந்திய சர்க்கார்ன் இரு மந்திரிகளும் மகாநாடு கூடிய பேசினார்கள். கிழக்கு மேற்கு பஞ்சாப்புகளின் அகதிகள் போக்கு வரத்து சம்பந்தமாக வகுக்கப்படவேண்டிய திட்டங்கள் சம்பந்தமாக ஆலோசித்து முடிவுசெய்யப்பட்டது. மழை காலம் வருவதால் இரு டொமினியன்களின் ராணுவப் போக்குவரத்து துரிதமாக நடைபெறவேண்டுமென்றும், அது சம்பந்தமாக ராணுவ அதிகாரிகள் ரயில்வே அதிகாரிகளுடன் கலந்து பேசி திட்டங்கள் வகுக்க வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது. மந்திரிகள் மீண்டும் கூடி இத்திட்டங்களைப் பரிசோதனை செய்து முடிவு செய்வார்கள்.

கம்பளங்கள் தேவை

கராச்சி, அக். 5

மேற்குப் பஞ்சாப்பில் 25 லெட்சம் முஸ்லிம் அகதிகளிருப்பதாகவும் அவர்கள் உடுத்திய உடையுடன் வந்திருப்பதால் வரப்போகும் மாரிகாலத்தில் அவர்களுக்கு கம்பளங்கள் இல்லையென்றும் பாகிஸ்தானில் கம்பள உற்பத்தி தொழிற்சாலை ஒன்றேனும் கிடையாதென்றும் ஆதலால் கம்பளங்களை அனுப்பவைக்க வேண்டுமென்று பாகிஸ்தான் பிரதமர் அந்நிய நாடுகளிலுள்ள பாகிஸ்தான் பிரதிநிதிகளுக்கு அவசரச்செய்தி அனுப்பியிருக்கிறார்.

தாராசிங் அறிக்கை

புதுடில்லி, அக். 5

பாக்கிஸ்தானிலிருந்து இந்தியாவுக்கு வரும் அகதிகளுக்கு அங்கு அவர் கூலிக்கிருக்குமிடங்களுக்குப் பதிலாக இங்கு நிலபுலங்களுக்குப் பதிலாக இங்கு நிலபுலங்களிக்கும் படியும் அதே போன்று இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் சென்றுள்ள அகதிகளுக்கும் ஏற்பாடுசெய்யும்படி தாராசிங் அறிவிக்கிறார்.

ஜூனாகத் தகராறு

புதுடில்லி, அக் 5

ஜூனாகத் சமஸ்தானம் பாகிஸ்தானுடன் இணைக்கப்பட்டதை இந்திய சர்க்கார் ஒப்புக்கொள்ளவில்லை.

இந்திய யூனியனைசேர்ந்த பாபாரிவாட் சமஸ்தானத்திலும் மங்ரோல் சமஸ்தானத்திலும் இந்தியத் துருப்புகள்வைக்கப்பட்டிருப்பதால் இந்திய சர்க்கார் ஆக்கிரமிப்பு செய்வதாகக் கருதப்படலாகாதென்றும் பாக்கிஸ்தானுடன் சமரசம் பேசி ஜூனாகத் தகராறைத் தீர்த்துக் கொள்ளத் தயாராக இருப்பதாகவும், ஜூனாகத் எந்த சர்க்காரில் சேரவேண்டுமென்பதை அறியப் பொதுஜனவாக்கெடுப்பு நடத்த வேண்டுமென்றும் இந்திய யூனியனைச் சேர்ந்த சமஸ்தானங்களின் பாதுகாப்புக்காகவே இந்திய துருப்புகள் அனுப்பப்பட்டிருப்பதாகவும் இந்திய சர்க்கார் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள்.

இன்று இந்திய சர்க்கார் அனுப்பிய துருப்புகள் போர்பந்தர் துறைமுகத்தில் வந்திறங்கின.

காஷ்மீர போட்டி குடியரசு சர்ககார்

லாகூர், அக். 5

இன்றிரவு இங்குள்ள ராய்ட்டர் நிருபருக்கு ராவல்பிண்டியிலிருந்து கீழ்க்கண்ட செய்தி கிடைத்திருக்கிறது:- பிரிட்டன் வலகியதும் காஷ்மீர ராஜா ஆட்சி முடிந்து விட்டதென்றும் அமிர்தசரசுஉடன்படிக்கையின்படியுள்ள காஷ்மீர ராஜகுடும்ப உரிமையும் ரத்தாகி விட்டதென்றும் ஜனங்களை முசாபர்பாத்தில் தற்காலிகமாக ஒரு போட்டிக் குடியரசு சர்க்காரை நிறுவியிருப்பதாகவும் ஒரு அறிக்கை வெளிவந்திருக்கிறது. அதில் அந்த தற்காலிக போட்டி சர்க்காரின் தலைவர் 'அன்வர்' என்ற கைச்சாத்திருக்கிறது. முசாபர்பாத் ராவல்பிண்டி - ஸ்ரீநகர் ரஸ்தாவுக்கு 20 மைல் தூரத்தில காஷ்மீர சமஸ்தான எல்லைக்குள்ளிருக்கிறது.

அக்டோபர் 4-ம் தேதி ஒரு மணிக்குப் பின் காஷ்மீர் மகாராஜாவோ அல்லது அவரது உத்தரவின்படி நடப்பவர்களோ போட்டி சர்க்காரை தண்டிக்கப்படுவார்கள் என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதில் கையெழுத்திட்டுள்ள முகமது அன்வர் என்பவர் பாகிஸ்தானை ஆதரிக்கும் காஷ்மீர் முஸ்லிம் கட்சியின் அங்கத்தினர். அக்கட்சித் தலைவர் சௌதுரி முகமது அப்பாஸ். காரியதர்சி ஆகா ஷௌகத் அலி இவர்கள் அரசியல் குற்றத்திற்காக ஒரு வருடம் சிறையிலிருந்தவர்கள்.

சமீபத்தில் காங்கிரஸ் அனுதாபியான ஷேக் அப்துல்லா சிறையிலிருந்து விடுதலைசெய்ததால காஷ்மீர் இந்திய யூனியனில் சேரப்போகிறதென்று இங்குள்ள முஸ்லிம் லீக்காரர்கள் கருதுகிறார்கள்.

கன்சர்வேடிவ்பத்திரிகைகள் கும்மாளம்

லண்டன், அக் 6

இன்று காஷ்மீர் சமஸ்தானம், ஜூனாகத் சமஸ்தானப் இவைகளைப்பற்றிய செய்திகளை இங்குள்ள பிரிட்டிஷ் டோரி பத்திரிகைகள் 7 பத்தித் தலைப்புகளுடன் முன்பக்கத்தில் வெகு பிரபலமாக கொட்டைஎழுத்துகளில் பிரசுரம் செய்திருக்கின்றன. "காஷ்மீர் மகாராஜா சர் ஹரி சிங்குக்கு" எச்சரிக்கை, 'ஜூனாகத்தக்கருகே இந்திய துருப்புகள்' இறங்குகின்றன என்று தலைப்புகள் கொடுத்திருக்கின்றன. (ராய்ட்டர்)

கண்டி பங்களாவில் பெண் கொலை

தோட்டக்காரன் கைது செய்யப்பட்டான்

கண்டி, அக் 6

கண்டியில் உள்ள "ரோஸ்மேரி கொட்டேஜ்" எனனும் வீட்டில் சனிக்கிழமை இரவு யாரோ புகுந்து அங்கிருந்த இரு பெண்களை மிருகத்தனமாகத் தாக்கிவிட்டார்கள். இதன் காரணமாக அவர்களில் ஒருவரான மே பெவான் இறந்து போனார். மற்றப் பெண்ணான ஹரியட் பெவான் கடுமையான காயங்களுக்காளாகி உள்ளார்.

சம்பவம் நடந்த பின்னர் அங்கு முதலாவதாக வந்ததென்று கருதப்படும் மேற்படி பெண்களின உறவினரான திரு. சார்ல்ஸ் டி சில்வா வீட்டமேலே இருந்து ரூ. 200-ம் ஆபரண வகைகளும் காணப்படவில்லை என்று தெரிவதாகக் குறிப்பிட்டார்.

மேற்படி சம்பவம் சம்பந்தமாக, வீட்டிலே இருந்த தோட்ட வேலையாள் ஒருவன் கைது செய்யப்பட்டுள்ளான்.

களவர்கள் வீட்டின் பின்புறத்தில் இருந்த ஓர் ஜன்னலுக்கூடாக வீட்டில புகுந்திருக்கிறார்கள் அவர்கள் பெண்களின குரல்வளையைப் பிடித்து நெரிக்க முயன்றிருப்பதாகச் சில அறிகுறிகள் காணப்பட்டனவாம்.

இவ்விரு பெண்களும் காலம் சென்ற எடவின் பெவான் என்ற வழக்கறிஞரின் குமாரிகள் என்றும், அவர்களின் சகோதரர் டாக்டர் பெவான் இறந்த காலம் தொடங்கி அவர்கள் தமது பங்களாவில் தனியாகவே குடியிருந்து வந்தார்கள் என்றும் தெரிகிறது. அவர்களின் இன்னொரு சகோதரரான வால்டர் பெவான் ஆஸ்திரேலியா சென்றுள்ளார்.

மன்னார் வாக்காளர் மனக் கொதிப்பு

தங்கள் பிரதிநிதி சதாசிவம், என். பி. கூட்டத்தில் சேர்ந்தது துரோகமெனகின்றனர்

மந்திரி பதவிக்குத் தந்திரம் செய்யலாமா?

["சுதந்திரன்" அரசியல் நிருபர்]

கொழும்பு, அக். 7

தபால்-தந்தி இலாகா மந்திரியாகிய திரு எஸ். சிற்றம்பலம் சில நாட்களுக்கு முன்பு மன்னாரில், அவ்வூர் வாக்காளர்கள் விரும்பினால் தமது பாராளுமன்றப் பிரதிநிதிகள் சபை அங்கத்தவர் பதவியை ராஜிநாமாச் செய்து மறு தேர்தலுக்கு நிற்பதாகக் கூறினார். திரு. சிற்றம்பலம் தமிழ்க் காங்கிரஸ் உதவியைப் பெற்றே மன்னார் தேர்தலில் வெற்றி பெற்றவர். ஆகவே மன்னார் தொகுதி வாக்காளர் திரு. சிற்றம்பலம் தங்களுக்கு அளித்த வாக்குறுதியைக் கொண்டு நடவாது யூ. என். பி. கட்சி அரசாங்கத்தில் பதவி யேற்றபடியால் ராஜிநாமாச்செய்து மறுபடியும் தம்முடைய தற்காலக் கொள்கையை வெளிப்படுத்தி தேர்தலுக்கு நிற்குப்படி கூடிய சீக்கிரத்தில் கேட்கப்படுவார் என்று இன்று மன்னாரினின்று வந்த ஒரு பிரமுகர் எனக்குக் கூறினார். இதற்கேற்ப மன்னார் வாக்காளர் அடங்கிய பொதுக் கூட்டம் ஒன்று மன்னாரவுணில் வைப்பதற்கு ஆயத்தங்கள் நடைபெறுவதாகவும் சொன்னார்

திரு. சிற்றம்பலம் மன்னார் வாக்காளர்களுக்கு சேனநாயக்கா அரசாங்கத்தை எதிர்ப்பதே தமது கொள்கை என்று தேர்தலின்போது கூறினவராம்.

பப்ளிக் ஸெர்விஸ் கமிஷன்

பப்ளிக் ஸெர்விஸ் கமிஷனின் தலைவர் பதவிக்கு ஒரவரை இங்கிலாந்திலிருந்து தருவிப்பதென இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளதென அறியப்படுகிறது.

அச்சகத்துக்கு ஆங்கிலத் தலைவர்

இலங்கைப் பாராளுமன்றத்திற்குத் தேவையானவற்றைப் பிரசுரிப்பதற்காக ஒரு அச்சகத்தை ஏற்படுத்துவதற்குக் கருமங்கள் நடைபெறுகின்றன.

இவ்வச்சகத்திற்கும் கவர்ன்மெண்ட் அச்சகத்திற்கும் ஒரு வகுதமான தொடர்பு இருக்கக் கூடாதென்றே அரசாங்க அதிகாரிகள் கருதுவதாக எண்ணப்படுகிறது.

இதற்காக அரசாங்கஅச்சகக் காரத் தலைவரை விமான மூலம் இங்கிலாந்திற்கு மிகவும் விரைவில் அனுப்பி அச்சகத்திற்கு வேண்டிய உபகரணங்களையும் அச்சியந்திரத்தையும் பெற்றுக் கொள்ள உத்தேசித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இவ் அச்சகம் கொழும்பிலுள்ள மக்கலம் வீதியில் நிறுவப்படும் என்று தெரியவருகின்றது.

மக்கலம் வீதியில் இப்பொழுது பல புதிய கட்டிடங்கள் போடப்படுகின்றன

எதிர்க்கட்சி ஐக்கிய முன்னணி

பாராளுமன்ற எதிர்க் கட்சியினர் தங்கள் கட்சித் தலைவரை நியமித்துக்கொள்ளுவதில் பலவிதமான அபிப்பிராயங்கள் இருப்பதாகக் கூறப்படுகின்றன.

ஆயின் இன்று எம்மைச் சந்தித்த ஒரு எதிர்க்கட்சிப் பிரமுகர் தாங்கள் எவ்வித கொள்கைகளையுடையவர்களாயிருந்தாலும் சேனநாயகா அரசாங்கத்தை எதிர்ப்பதில் ஒரே நோக்கத்தைக் கொண்டிருப்பதாகவும் அறிவு, விவேகம், வாக்குச் சாதுரியம், அரசியல் அனுபவம் நிறைந்த ஒருவரையே எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப் போவதாகவும் கூறினார்

டாக்டர் கொலவின் ஆர். டி. சில்வாவின் பெயரே எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு அதிகமாக அரசியல் வட்டாரங்களில் அடிபடுகிறது. ஒரு கட்சியைத் தவிர்த்து மற்ற எல்லா எதிர்க்கட்சிகளும் அவரையே ஆதரிப்பதாகத் தெரிகிறது.

சர்ச்சிலுக்கு காந்திஜி சாட்டை

கனவு காண்பதற்கு எச்சரிக்கை

வாய்த்தடுக்கை அடக்க பாணம்

புதுடில்லி, அக் 5

இன்று மகாத்மா காந்தி பிரார்த்தனைக் கூட்டப் பிரசங்கத்தில் பேசியபோது, நேற்று பிரிட்டனில் நடைபெற்ற பிரிட்டிஷ் கன்சர்வேடிவ் கட்சி மகாநாட்டில் வின்ஸ்டன் சர்ச்சில் நிகழ்த்திய பிரசங்கத்தைச் சுட்டிக் காட்டிப் பேசினார். காந்திஜி கூறியதாவது:—

பிரிட்டனிலுள்ள எல்லாக் கட்சிகளின் சம்மதத்தைப் பெற்றபிறகே பிரிட்டிஷ் தொழிற்கட்சி அரசாங்கம் இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் ஆட்சியை ரத்து செய்துகொண்டது. இந்த கணியமான செயலைப் பற்றி சர்ச்சில் இன்னும் சச்சரவு செய்வது அவருக்குக் கொஞ்சங்கூட அடுக்காததாகும். இந்தியாவுக்கு சுதந்திரமளித்து இந்தியாவின் பாமர மக்களுக்கு இன்பத்தையும் ரத்தக்களரியையும் கொண்டுவந்துவிட்டுவிட்டதாக சர்ச்சில் பிரிட்டிஷ் தொழிற்கட்சி அரசாங்கத்தின் மீது குற்றம் சாட்டுகிறார். ஆனால் இந்தியா 7 லட்சம் கிராமங்களையுடையதென்பதையும் இந்த 7 லட்சம் கிராமங்களிலும் பைத்தியம் பிடிக்கவில்லையென்பதையும் சர்ச்சில் தீர யோசித்துப் பேசியதாகத் தெரியவில்லை அப்படிதான் இந்தியாவெங்கும் வெறிச் செயல்கள் நடைபெற்றாலும் இந்தியா அடிமை நாடாகவே இருக்கவேண்டுமென்று சர்ச்சில் கருதுகிறாரா? நல்லவர்களுக்குத்தான் சுதந்திரம் பெற உரிமையுண்டு என்று அவர் எண்ணுகிறாரா? அப்படியானால் தைரியமின்றி அடிமையாக இருப்பதைவிட பைத்தியத்துடன் சுதந்திரமாக இருப்பதே நலம் என்ற பாடத்தைப் படித்துக் கொடுத்தது பிரிட்டிஷார்தான் என்பதை அவர் அறியவில்லை போலும் சுதந்தர ஆட்சி என்றால் அதில் தவறுகளிருக்கக் கூடும். அதனால் சுய ஆட்சிக்குப் பதில் அந்நியரது நல்ல ஆட்சி இருக்கவேண்டுமெனபதில்லை

இது பிரிட்டிஷ் எங்களுக்குப் படித்துக்கொடுத்த நல்ல பாடமே அடுத்த தேர்தலிலாவது வெற்றிபெற்றால் அவர் இந்தியாவை மீண்டும் அடிமைப் படுத்தலாமென்று எண்ணுவாரேயாகில் அது அவரது கனவாகவே முடியும்.

நசுக்கப்பட்ட நாடுகளுக்காகப் போராடுவது ரஷியாவே

ஆனால் அரசியல் விடுதலையே அடிமை நாடுகளின் லட்சியம்!

இந்தோனேஷியப் பத்திரிகை அபிப்பிராயம்

அமெரிக்க-ரஷிய அங்கப்போர்ச் செய்திகள்

பட்டேவியா, அக் 5

இந்தோனேஷியக் குடியரசின் தலைநகரிலிருந்து வெளியாகும் தினசரிப் பத்திரிகை 'ராட்சக', 'இந்தோனேஷிய பிரச்னையில் ரஷியாவின் மகத்தான கனுதாபம்' என்ற மகுடமிடு எழுதியுள்ள தலையங்கத்தின் பிரவரமாறு தெரிவிக்கிறது:-

நசுக்கப்படும் எல்லாமக்களும் அவர்களின் சுதந்திரத்திற்காகப் போராடும் சோவியத் ரஷியா மீது பெரும் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். ஏகாதிபத்திய வல்லரசுகளால் நசுக்கப்படும் குடியேற்ற நாட்டு மக்களுக்கு இப்பொழுது உலகை பிளவுபடுத்திக் கொண்டிருக்கும் இரு விதக் லட்சியங்களைப் பற்றிக் கவலையில்லை. அவர்களாங்கள் ஏகாதிபத்திய அடிமைத் தளையினின்றும் அரசியல் விடுதலையடைய வேண்டுமென்பதே அவர்களது முக்கியமான லட்சியமாகும்.

மலையாவில் சோவியத் வர்த்தகப் பிரதிநிதி

சிங்கப்பூர் அக் 5

இங்கு சோவியத ரஷியாவுக்கு ஏற்றுமதி செய்வதற்காக இதுவரை ரப்பர் வாங்கிக் கொண்டிருந்த சோவியத வர்த்தகப் பிரதிநிதி நிகோலெய்ப்ளக்கின் என்பவருக்கு இனி தங்கியிருக்க அனுமதி அளிக்க முடியாதென்றும் அவருக்களிக்கப்பட்ட அனுமதிச் சீட்டு காலாதியாகிவிட்டதென்றும் சர்க்கார் அறிவித்து விட்டார்கள் ஆகவே அவர் நாளை ரஷியாவுக்குத் திரும்பிச் செல்கிறார் என்று 'ஸ்ட்ரெயிட்ஸ் டைம்ஸ்' பத்திரிகை தெரிவிக்கிறது

இச்செய்தியைப்பற்றி சிங்கப்பூர் சர்க்காரோ அல்லது சோவியத் பிரதிநிதியோ எவ்வித அபிப்பிராயமும் தெரிவிக்காமல் மௌனமாக இருக்கிறார்கள்.

அவர் வாங்கி, இன்னும் ஏற்றுமதியாகாதிருக்கும் ரப்பரை அவரது ஏஜண்டுகள் ஏற்றுமதி செய்வார்கள். இது வரை மலையா ரப்பரை அவர் வாங்க சோவியத் கப்பலில் ஏற்றி கருங்கடல் துறைமுகமான ஓடெசாவுக்கு அனுப்பிவந்தார்

ஐரோப்பாவில் கமியூனிஸ்டுகள் மகாநாடு

மாஸ்கோ, அக் 5

சோவியத் கமியூனிஸ்ட் பத்திரிகை 'பிரவடா' இன்று கீழ்க்கண்ட செய்தியைப் பிரசுரித்திருக்கிறது:- சமீபத்தில் போலந்து நாட்டில் ஐரோப்பாவிலுள்ள 9 நாடுகளைச் சேர்ந்த கமியூனிஸ்ட் கட்சிகளின் மகாநாடு நடைபெற்றது ஐரோப்பாவில் ஏகாதிபத்தியத்தை முறியடிக்க எல்லா ஜனநாயக சக்திகளையும் திரட்டுவதற்கு தீவிரமான நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று அம் மகா நாட்டில் தீர்மானிக்கப்பட்டது. அத்தீர்மானத்தின் விபரம் பின்வருமாறு:-

ஏகாதிபத்திய வாதிகளுக்கும் ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பவர்களுக்குமிடையே அதாவது இந்த இரு பெரும் சக்திகளுக்கிடையே இப்பொழுது பெரும் போராட்டம் நடைபெறுகிறது. இப்போராட்டத்தால் முதலாளித்துவம் பலஹீனமடைந்து வருகிறது. சமதர்ம ஜனநாயக சக்திகள் வலுவடைந்து வருகின்றன ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் தனது ஏகாதிபத்தியக் கொள்கையை நிலைநாட்டுவதற்காக அமெரிக்கா வானது ஜெர்மனியையும் ஜப்பானையும் தனது கருவிகளாக உபயோகிக்க முயல்கின்றது ஜெர்மனியிலும் ஜப்பானிலும் முதலாளிகளை அமெரிக்கா ஆதரிக்கு தனது வசப்படுத்தி வருகிறது. இந்த ஏகாதிபத்திய சதியில் வலதுசாரிகளாக இருக்கும் ஐரோப்பிய சோஷியலிஸட் தலைவர்களும் கலந்து கொண்டிருக்கிறார்கள்.

மகாநாடுபற்றி ரஷியாவில் அபிப்பிராயம்

சமீபத்தில் போலந்தில் நடைபெற்றமுடிந்த 9 ஐரோப்பிய நாடுகளின் கமியூனிஸ்ட் கட்சிகள் மகாநாடுபற்றி ரஷியாவில் கீழ்க்கண்ட அபிப்பிராயம் நிலவி வருகிறது:-

1943-வது வருடம் கோமின்டெர்ன் கலைக்கப்பட்ட பிறகு இப்பொழுது பெல்கிரேடில் நடைபெற்ற மகாநாட்டின் மூலம் அது மீண்டும் ஜனனமாயிருக்கிறது. பெல்கிரேடில் சர்வதேச கமியூனிஸ்ட் ஒத்துழைப்ப ஸ்தாபனம் நிறுவப்படுகிறது. இதை முசுப்படுத்துகிறது கமியூனிஸ்ட் அரசியல் முன்னேற்றத்தில் இது ஒரு முக்கியமான சட்டமாகும் இந்நடவடிக்கையானது உலகில் ஏகாதிபத்தியத்தை நிலைநாட்ட அமெரிக்காவில் திரண்டிருக்கும் ஏகாதிபத்திய சக்திகளுக்கு விரோதமாகபோர் தொடுக்கும் யுத்தப்பிரகடனமென்றே சொல்லலாம். உலக முழுவதிலும் கமியூனிஸ்ட் கொள்கையைப் பரப்பவே பெல்கிரேடில் இந்த ஸ்தாபனம் நிறுவப்பட்டிருக்கிறது. போலந்து மகாநாட்டில் கலந்து கொண்ட 9 நாடுகளில் மட்டும் கமியூனிஸ்ட் கொள்கையைப் பரப்ப இந்த ஸ்தாபனம் நிறுவப்பட்டிருக்கிறதா அல்லது உலகெங்கும் பரப்புவதற்காக இது நிறுவப்பட்டிருக்கிறதா என்பது இன்னும் திட்டமாகத் தெரியவில்லை. மற்ற ஐரோப்பிய நாடுகளில் முக்கியமாக பிரிட்டன்போன்ற நாடுகளின் கமியூனிஸ்ட் கட்சிகள் இந்த மகாநாட்டில் ஏன் கலந்து கொள்ளவில்லையென்பதும் தெரியவில்லை மகாநாட்டில் கலந்து கொள்ள பின்

(4-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்

THE "SUTANTIRAN"

194 உ, நட்டாத் தெரு, கொழும்பு. போன்: 3411.

சர்வஜித்து ஸூ புரட்டாசி மீ 21உ செவ்வாய்க்கிழமை

இலங்கையில் காந்தி ஜெயந்தி

இந்தியாவில் காந்தி ஜெயந்தி தலைவிடங்களிலும் கொண்டாடப்படுவதைப பல பத்திரிகைகளிலும் வாசிக்கிறோம். இலங்கையிலும் அது கொண்டாடப்படுவருகிறது. ஒரு தலைவரையோ அல்லது கடவுளையோ வழிபடுவதென்றால் குறிப்பிட்ட காலத்தில் கூட்டங்கள் கூடியும், திருவிழாக்கள் கொண்டாடியும் வழிபடுவது அல்ல. அப்பெரியார்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடப்பதுவே அப்பெரியார்களைப் பின்பற்றுவதாகும்.

சாந்த மூர்த்தியான புத்த பிரானை வழிபடுவதென்றெண்ணி ஆடு கோழிகளைப் பலியிட்டு வழிபடலாமா? அதைவிட மகா பாதகமான செயல் வேறுண்டோ? அதுபோல் மகாத்மா தியாகமூர்த்தி, அவர் பெருந்தொண்டு தென ஆபிரிக்காவில் செய்திருக்கிறார்; இந்தியாவில் அதைவிடப் பெரிய தொண்டு செய்திருக்கிறார் என்றெல்லாம் சொல்லிவிட்டு அவர் தன் லட்சியமாகக் கொண்ட சத்திய வழியை விடவேறு வழியில் செல்லுவது பொருந்துமா என்றுதான் கேட்கிறோம். மகாத்மாவின் புகழை எடுத்துக் கூற வேண்டாம் என்று சொல்லவில்லை. அவரது லட்சியங்கள் என்னவென்பதை விளம்பரப்படுத்த வேண்டாம் என்று சொல்லவில்லை. அவற்றை எடுத்துக்கூற வேண்டியதன் காரணம், அதன் பிரகாரம் ஒரு சிலராவது பின்பற்றி நடக்கட்டும் என்றுதானே! அந்த முறையில் இலங்கையில் பிரசங்கங்கள் நடைபெறுகின்றனவாவென்றுதான் கேட்கிறோம். நடைபெறவில்லையாயின் அதன்படி நடந்து வழிகாட்டக்கூடிய சில தலைவர்களாவது வெளிக்கிளம்ப வேண்டும்.

மகாத்மாவைக் கூட்டத்தில் புகழ்ந்துவிட்டு வீடு வந்ததும், தீண்டக் கூடியவன், தீண்டப்படாதான் என்ற பாகுபாட்டைக் காட்டும் தலைவர்கள் பேச்சுஎதற்குப்பயன்? மகாத்மா சாந்தமூர்த்தி, சத்தியம் தவறாதவர் என்று சொல்லிவிட்டு பொழுது விடிந்ததும் முதல் பொய் சொல்லியே காலம் கழிப்பவர் பிரசங்கங்கள் எதற்கு? மகாத்மா சத்தியாக்கிரகம் செய்தார் என்று சொல்லிவிட்டு, வெளியேயுள்ள ஏழைமக்களைச் சத்தியாக்கிரகம் செய்யச்சொல்லித் தாங்கள்வீட்டில் சுகமாய்க் காலங்கழிக்கும் தலைவர்கள் பிரசங்கம் எதற்கு?

நாம் வற்புறுத்தக் கூடியது ஒன்றுண்டு. இலங்கை அரசியல துறையில் பலவிதமான தலைவர்கள் கிளம்பியுள்ளார்கள். பலாத்காரத்தையே ஆதாரமாகக் கொண்டவர்கள் கட்சியும நாட்டில் இருக்கிறது. சாதவீகம் சாதவீகம் என்று சொல்லிக் கொண்டு இரகசியத்தில் பலாத்காரத்தைக் கையாளுபவர்களையும் காண்கிறோம். இந்தியத் தலைவர் அதைச்செய்தார்கள், இதைச் செய்தார்கள் அதன்படி தாங்களும செய்வோம் என்று வாய்வீச்சு வீசிவிட்டு சுயநலக் கொள்கையில் ஈடுபட்டுக் கிடப்பவர்களையும் காண்கிறோம்.

இத்தகைய தலைவர்களையெல்லாம் விட்டு உன்னத லட்சியமும், சத்திய வாழ்க்கையும் கொண்டுள்ள தலைவர்கள் தோன்ற வேண்டும். இந்நிலையில் உள்ளவர்கள் முன்னேறி வரவேண்டின் பல வருஷகாலங்கள் செல்லும். ஆரம்ப காலத்தில் இவர்கட்குப் பெருங் கஷ்டங்கள் ஏற்படலாம். பொய்யும் புரட்டும் உள்ளவர்கள் முன்னேறிவர தாங்கள் பின்னடையும்படி ஏற்படுவதையும் அனுபவிக்கவேண்டும். எல்லாவிதமான கஷ்டங்களுக்கும் நஷ்டங்களுக்கும் உட்பட்டு லட்சியத்தையே பெரிதெனக் கொண்ட தலைவன் எப்பொழுதும் வெற்றியடைவான். இலங்கையில் ஓர் லட்சிய புருஷன் தோன்ற வேண்டும். அப்பொழுதுதான் இலங்கையின் அரசியல் புனிதமாகும்.

பர்மா நிபுணரின் லண்டன் விஜயம்

சுதந்திர தினம் நிர்ணயிக்க மந்திரி சபை கூடுகிறது

ரங்கூன், அக். 5

பர்மா சர்க்காரின் அரசியற் சட்ட ஆலோசகர் சாவுடன் இன்று லண்டனுக்குப் புறப்பட்டார். அதிகார மாற்றத்தைப்பற்றி பிரிட்டிஷ்பார்லிமெண்ட்மசோதாவின்போது பர்மா அரசியற் சட்டம் சம்பந்தமாக ஏற்படும் பிரச்னைகளை அவர் தீர்த்து வைப்பார் என்று தெரிகிறது.

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலிருந்து பிரிந்து தனி அரசாங்கமாகும் பர்மா யூனியன் சட்டம் செப்டம்பர் 19-ம் தேதி பர்மா அரசியல் நிர்ணய சபையில் நிறைவேற்றப்பட்டது.

ஆங் ஸான் மரணச் சடங்கு

பர்மா அரசியல் அதிகார மாற்ற தினத்தைத் தீர்மானிக்கும்படி பிரிட்டிஷ் அரசாங்கம் செய்த வேண்டுகோளின் பிரகாரம் ஒரு தினத்தை நிர்ணயிப்பதற்கு பர்மா மந்திரிசபை சீக்கிரம் கூடும் என்று தெரிகிறது.

காலஞ்சென்ற பர்மா தலைவர்கள் ஊ ஆங் ஸான் முதலியோரின் மரணச் சடங்கு சுதந்திரப் பிரகடனத்தின் பின் எட்டாவது நாள் அதிவிமரிசையாக நடைபெறும். (ராய்ட்டர்)

தென் ஜாவாவில் பலவந்தமாய் நுழைந்த அமெரிக்க விமானம்

அதில் இருந்து 3 டச்சுக்காரர் கைது

பட்டேவியா, அக். 5

இங்கு பலவந்தமாக தென் ஜாவாவில் இறங்கிய அமெரிக்க விமானத்தில் இருந்த மூன்று டச்சுக்காரர்கள் இந்தோனேஷியப் போர்வீரர்களால் சிறைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அந்த 3 டச்சுக்காரர்களையும் விடுதலை செய்தாலொழிய தான் திரும்பிப் போவதில்லை என விமானத்திலிருந்த அமெரிக்க அதிகாரி கூறிவிட்டார்.

பட்டேவியாவில் உள்ள அமெரிக்க ஸ்தானிகர் ரேடியோ மூலமாக மேற்படி டச்சுக்காரரில் இருவர் பாதுகாப்புக் கவுன்ஸிலுக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் முகமாக வந்த அவ்வமெரிக்க விமானத்தின் வழிகாட்டிகளாக வந்தவர்கள் என்றும், மற்றவர் தனது பெற்றோரின் சுகயீனத்திற்காக ஹாலந்து செல்பவர் என்றும் கூறி அவர்களை விடுதலைசெய்யுமாறு வேண்டிக்கொண்டார். (ராய்ட்டர்)

எகிப்தில் காலரா நோய்

விமானங்களிலிருந்து டி. டி. றி மருந்து தூவப்படும்

கெய்ரோ, அக் 5

எகிப்தில் காலரா நோய் பரவியிருப்பதால் காலரா கிருமிகளை ஈக்கள் பரப்பவொட்டாது கொல்வதற்கு எகிபதிய ராணுவ விமானங்கள் டி. டி. றி மருந்தை முக்கியமான இடங்களில் ஆகாயத்திலிருந்து தூவும். அப்பொழுது ஜனங்கள் வீட்டு ஜன்னல்களைத் திறந்து வைத்துக்கொண்டு வீட்டுக்குள்ளிருக்கும்படி சுகாதார மந்திரி கட்டளையிடிருக்கிறார். காலரா தொத்து நோயின காரணமாக பாலஸ்தீனத்திற்கும் எகிப்துக்குமிடையே விமானத் தபால் போக்குவரத்து நிறுத்தப்பட்டிருக்கிறது. (ராய்ட்டர்)

முழு சிங்களப் பலம் மந்திரி சபையில் இல்லையே!

திரு. பண்டாரநாயக்கா திறமைக்குத்தக்க முக்கிய இலாகா கொடுக்கப்படவேண்டும்

திறமையில்லாத திரு. ஜாயாவுக்கு தொழில் மந்திரி பதவியா?

பாம்பும் கீரியும் போன்றுள்ள எதிர்க்கட்சிகள் கிளர்ச்சியால் பொது ஜனங்களுக்குத்தான் கெடுதலாம்!

திரு. பண்டாரநாயக்கா பத்திரிகையின் அபிப்பிராயம்

சுகாதார, ஸ்தல-ஸ்தாபன மந்திரி திரு பண்டாரநாயக்காவின் பத்திரிகையான "சிங்கள பலய" 4-10-47ல் எழுதியஆசிரியத் தலையங்கம பின்வருமாறு:-

ஐ. தே. கட்சியின் தலைவர் திரு. சேனநாயக்கா பிரதம மந்திரி பதவியை ஏற்றுக்கொண்டு, மந்திரி சபையையும் அமைத்துவிட்டார். எனினும அவர் தமது கடசிக்கு மாதிரம் மந்திரி சபையை வரையறுக்காமல் சுயேச்சை அங்கத்தவர்களை சேர்த்துத்தான் தமது கடமையைச் செய்திருக்கிறார் அப்படி அவரால் சேர்த்துக்கொள்ளப் பட்டவர்கள் யார்? பொன்னம்பலம் சங்கததோடு எதிர் நின்று போட்டியிட்ட திரு. சுந்தரலிங்கமும், தமிழ்க் காங்கிரஸின் ஆதரவு பெற்று வெற்றி பெற்ற திரு. சிற்றம்பலமுமேயாவர் இவர்கள் இருவருக்கும மந்திரிப் பதவி கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்றப்படி முஸ்லிம் ஒருவருக்கும் மந்திரிப்பதவி கொடுககப்பட்டிருக்கிறது சுருக்கமாகக் கூறினால் சகல வகுப்பினரையும் கௌரவிக்கும் முகமாக எல்லோரையும சேர்த்துக்கொண்ட மந்திரி சபை அமைக்கப்பட்டிருக்கிறது.

எனினும், இந்த கூட்டு மந்திரி சபையில் விலகக முடியாத குறை குற்றங்களுமுண்டு அதாவது சிங்கள ஜாதியின் பிரதானமும் முக்கியமுமான அம்சங்கள் இந்த மந்திரி சபையில் காணப்பட வில்லை. அதாவது சிங்களவர்களுக்கு நேரடியான பலம் இல்லாதிருப்பதேயாகும்.

துரதிர்ஷ்டவசமாக ஹென்றி அமரசூரியா, சுசந்தா டி பொன்சேக்கா போன்றார்கள் தேர்தலில் தோல்வியடைந்துஇருப்பதும் நாம் கவனிக்கத் தக்கது. ஆனபடியால், இவர்களுக்கு மந்திரிசபையில் இடம்பெற வசதியில்லாமற் போய்விட்டது.

இந்த மந்திரிசபையை பார்க்த பார்வையில் தெரிபக்கூடிய விலக்கமுடியாதகுற்றங்களென்னவென்றால்,மந்திரிப்பதவிகளுக்கு நியமனம் செய்யப்பட்டவர்களை சம்பந்தமாகவல்ல, அவர்களுக்கு ஒப்புக் கொடுத்திருக்கும் காரியப் பொறுப்புகள் சம்பந்தமாகத்தான் குறைசொல்ல வேண்டியிருக்கிறது

மந்திரிப் பதவி சம்பந்தமாக எவ்விதலாயக்கும் திறமையும் இலலாதவரும் ஒத்துழைக்கும் சாதுரிய நடததையிலலாதவருமான ஜே ஆர் ஜயவர்தனா அவர்களுக்கு பொக்கிஷ மந்திரி பதவிகொடுத்தது இவ்விதகுறைகளில ஒன்றாகும்.

அரசாங்கத்தின் உயர்தர அதிகாரியாகவும், பொலிஸ் வீரனைப்போன்றும் சரியானபடி பரிபாலனம் செய்யக்கூடியவரும், தேசிய பாதுகாப்பையும் அபிவிருததியையும குறிக்கோளாகக் கொண்டு திறமையான புனருத்தாரணங்களை செய்யக்கூடிய ஆத்மபலம் உடையவரும் அரசியலில் மட்டற்ற அனுபவமும் உடையவருமான திரு. பண்டார நாயக்காவை ஒருபக்கமும், மறுபக்கம் இவ்வளவு திறமையும் அநுபவமும் இல்லாத ஸர். ஒலிவர் குணதிலகாவுக்கு உள்நாட்டு மந்திரிப் பதவி கொடுததததையும் வைத்துப் பார்ததால குற்றம் என்னவென்று தெரிகிறது.

வேலையில்லாப் பிரச்னை சம்பந்தமாகவும் தொழில்துறை, சமூக சேவா சம்பந்தமாகவும் எவ்வித அனுபவமும் நிர்வாகத் திறமையும் இல்லாத திரு. டி. பி. ஜயாவுக்கு தொழில்-சமூக சேவா மந்திரி பதவி கொடுத்ததும் ஒரு விலக்கமுடியாத குறையாகும்.

கைததொழில், கைத்தொழில் ஆராய்ச்சி சம்பந்தமாகவும் எவ்வித பயிற்சியும் அனுபவமும் திறமையும் இல்லாத திரு ஜோர்ஜ் டி சில்வாவுக்கு தொழில் மந்திரி பதவி கொடுத்தது போன்ற இனனும் பல குறைகள் இந்த மந்திரி சபையில இருக்கின்றன.

இந்தமந்திரி பதவி நியமனங்கள் சமபந்தமாக பிரதம மந்திரியார் ஒரு வகையில நியமதியாய் இருந்தபோதிலும், இந்த நடவடிக்கையின் குறை குறறங்களை காலப்போக்கில் பொதுமக்கள் பகிரங்கத்திற்கு கொண்டு வருவார்களென்பது நிச்சயம.

ஒருபோதும் அரசாங்கக் கட்சியோடு ஒத்துழைக்க மாட்டோமென்று பாம்பும கீரியும போன்றிருக்கும், இடதுசாரிகளும் தமிழர் காங்கிரசும இந்தியன் காங்கிரசும் ஒருமுகப்பட்டு, அரசாங்கத்தை முறிததுவிட்டால் அதன் பிரதிபலன் என்னவாகும்? எதிர்பாராதபடி ஏதும் அசம்பாவிதங்கள் ஏற்பட்டு விட்டால் அதனால் பொது மக்கள் கஷடப்படுவார்களேயொழிய, அரசாங்கக் கட்சிகுகு ஏதும் தீமையுண்டாகி விடாது.

பாராளுமன்ற அங்கத்தவர்

கிராமக் கமிட்டித் தலைவரைத் தாக்கினாரா?

வலஸ்முல்ல, அக் 6

பாராளுமன்ற அங்கததவராகிய திரு. லக்ஷ்மன் இராஜபக்ஸ, வலஸ்முல்ல கிராமக் கமிட்டித் தலைவராகிய திரு. ஜே. டபிள்யூ. பிரான்ஸிஸ் பண்டார என்பவரைத் தாக்கியதாகக் குற்றஞ் சாட்டி வலஸ்முல்ல போலஸைச் சேர்ந்த ஸப்-இனஸபெக்டர் அபயக்கோன் ஒரு வழக்கை மாஜிஸ்டிரேட கோர்ட்டில் தாககல் செய்துள்ளார்.

திரு. இராஜபக்ஸ 13-ம் தேதி கோர்ட்டில் ஆஜராக வேண்டுமென்று கட்டளை அனுப்புமாறு நீதிபதி உத்தரவிடடுள்ளார்.

தபாற் பையிலும் கள்ள அரிசி

தபால் பியூனுக்கு ரூ-100 அபராதம்

கொழும்பு, அக். 6

ஹொரணையிலிருந்து கொழும்புக்கு சட்டவிரோதமாக அரிசி கொண்டுவருவதறகு ஒரு தபால் பியூன் தனது தபாற் பையை உபயோகித்த விபரம் கொழும்பு மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் கூறப்பட்டது.

இவ்வழக்கில் ஹொரஸ சிங்கோ என்ற கெஸ்பேவ வாசி தான் குற்றவாளி என்பதை ஒப்புக்கொண்டான்.

ரூபா நூறு அபராதம் அவனுக்கு விதிக்கப்பட்டது. அதைச் செலுததத தவறும் பட்சததில் ஆறு வார கடுழியச் சிறைத தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் நிதிபதி தமது தீர்பபிலே குறிபபிட்டார்.

கன்னித் தமிழ் கவிஞனின் நினைவு எந்நாளும் நிலைத்திருக்க சின்னம்

எட்டையாபுரத்தில் பாரதியாரின் ஞாபகார்த்த கட்டிடத் திறப்பு விழா

பாரதிநிதிக்கு பட்டம்மாள் பாட்டுகளின் 'ரிக்கார்டு' விற்பனைப் பண உதவி

சென்னை, அக். 4

பாரதி ஞாபாகார்த்த வரவேற்பு கமிடடியின் மெம்பர் ஸ்ரீ டி. சதாசிவம் விடுததுள்ள அறிக்கையில் அறிவிப்பதாவது:-

இபபொழுதுள்ள சிரமமான நிலையில் சக்திக்கு எட்டிய வரையில பாரதி ஞாபகார்த்த கட்டிட திறப்பு விழாவில் கலந்துகொள்ளும் அழைப்பாளர் பிரமுகர்கள். பத்திரிக்கைகாரர்கள் ஆகியோர்களுக்கு சாப்பாடும் தங்க இடமும தேடித்தர ஏற்பாடு செய்திருக்கிறோம் எட்டையாபுரததில் பாரதி ஞாபகார்த்த கட்டிடத் திறப்பு விழாவில் ஒரு குறிப்பிடப்பட்ட வரயபுக்குடபட்டு சாப்பாடு போட சென்னை சர்க்கார் அனுமதித்துளளனர். அங்கு கூடும் எல்லா ஜனங்களுக்கும் சாப்பாடு அளிப்பது இந்த உணவு நெருக்கடியான காலத்தில் சாத்யமல்ல.

அழைப்பாளர்களுக்கும், பத்திரிகை நிருபர்களுக்கும் எழுததாளர்களுக்கும் உணவு டிகட் அனுபபி வருகிறோம். அவர்கள் பாரதி ஞாபகார்த்த கமிட்டி காரியதரிசி, எட்டையாபுரம், கோவிலபட்டி மார்க்கம் என்ற விலாசத்திற்கு கொடர்பு ஏற்படுததிக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ள படுகின்றனர். எந்த தேதியில் எந்த ரயிலில் வருவீர்கள் என்பதை மேற்கண்ட விலாசத்திற்கு தெரிவிததால் கோவில்பட்டி ஸடேஷனில் சந்தித்து எட்டையாபுரததிலுள்ள ஜாகைக்கு அழைத்துவர சௌகரியமாயிருக்கும். பார்வையாளர்கள் தங்களுடன் குறைந்த பட்ச மூட்டைகள் கொண்டு வருவது தான் சௌகரியம். பெட்டி படுக்கையின் மேல் தங்கள் பெயரை எழுதி வைப்பது நலம்.

அக்கம் பக்கத்து இடங்களிலிருந்து பல பஸ்கள்விட உததேசித்துள்ளோம். 12 உயன்றும் 13உ யன்றும் 4 நிமிஷத்துக்கு ஒரு பஸ வீதம் கோவில்பட்டி - எட்டையாபுரத்துக்கும் எட்டையாபுரம்-கோவில்பட்டிக்கும் விட உத்தேசித்துள்ளோம். 500 தொண்டர்களுக்கு அதிகமாக இதுவரை சேர்க்கப்பட்டு விட்டனர் மேற்கொண்டு தொண்டர்களை சேர்க்க முடியாதென வரவேற்புக் கமிட்டி கூறுகிறது.

பாரதி மண்டபததின் எதிரே ஒரு பெரிய பந்தல் போடப்பட்டிருக்கிறது. அதில் சுமார் 3000 பேர் உட்கார முடியும். அழைக்கப்பட்டிருப்பவர் பிரமுகர்கள், பத்திரிகை நிருபர்கள் எழுததாளர் ஆகியோர்கள் உடகார சாத்யமானவரை பிரசங்க மேடை அருகாமையில ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

12-ம் தேதி மாலையில் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மியின் சங்கீத கச்சேரியுடன் விழா ஆரம்பமாகிறது. சங்கீத ரத்ன ஸ்ரீ சௌடையா வயலின் வாசிப்பார். 12-ம் தேதி இரவு சாப்பாட்டுக்கு பின்னர் ஸ்ரீ எஸ். எம். தண்டபாணி தேசிகரின் பாட்டுக்கச்சேரி நடைபெறும்

13-ம் தேதி காலையில் சூரியன் உதயமாகும் தறுவாயிலமேளவாதியும் கோஷிக்க சங்க நாதத்தின் மத்தியில் பாரதி ஞாபகார்த்த கட்டிடத்தை ராஜாஜி திறந்துவைப்பார்.

போலிஸ் கான்ஸ்டபிளுக்குக் கத்திக்குத்து

மக்கொனையில் நடைபெற்ற சம்பவம்

களுத்துறை, அக். 5

மக்கொனை கடைத தெருவில் இன்று மாலை பி. பி. சமரகோன் என்னுமபோலிஸ் கான்ஸ்டபிள் தியடபு என்னும் ஒருவனால் கத்தியால் குத்தப்பட்டார். மேற்படி நபர் போலிஸ கான்ஸடபிளைத் திட்டியதாகவும், அவனைப போய்விடுமபடி கன்ஸ்டபிள்கூற அவன் கானஸ்டபிளைச் சண்டைக் கிழுத்ததாகவும், தெரிகிறது. முடிவில் முதுகில் தியப்பு கத்தியால் குத்திவிடடு ஓடிவிட்டான்.

சமரக்கோன் ஆபத்தான நிலையில் ஆஸபத்திரியில் அனுமதிககப் பட்டார்.

துருக்கியின் ராணுவ தூதுக்கோஷ்டி

அமெரிக்காவுக்குப் பயணம்

அன்காரா, அக் 5

துருக்கி ராணுவக் தலைவர் ஜெனரல் ஒமர்டக 15 ராணுவ அதிகாரிகளடங்கிய ஒரு தூதுக் கோஷ்டியை நடத்திக்கொண்டு இன்று விமான மார்க்கமாக அமெரிக்காவுக்குப் பயணமானார். அவர் அமெரிக்காவில் ராணுவத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவார். ட்ரூமன் கொள்கைத் திட்டப்படி துருக்கி ராணுவ அபிவிருத்திக்கு அமெரிககா உதவி செய்வது பற்றி கலந்து பேசுவார். (ராய்ட்டர்)

நிகழ்ச்சிகளின் முழு விபரம் அடுதத வார ஆரம்பத்தில் அறிவிக்கப்படும்.

ராஜாஜி சென்னைக்கு வருவார்

சென்னை, அக். 4

ராஜாஜி கல்கததாவிலிருந்து விமானததில் புற பட்டு அக்டோபர் மாதம் 10-ம் தேதி மத்தியானம் 1-40 மணிக்கு சென்னை வந்து சேர்வார்.

11ம்தேதியன்று சென்னையிலிருந்து கோவில்பட்டிக்கு புறப்படுவார். எட்டையாபுரததில பாரதி ஞாபகார்த்த கட்டிடத்தை திறந்துவைக்கவே ராஜாஜி வருகிறார் ஞாபகார்தத சின்னத்தை ஸ்ரீ சரோஜினி தேவி திறந்து வைப்பதாக இருந்தார். ஆனால அன்னாரால் வரமுடியவிலலை. இரு வருஷங்களுக்கு முனகை கட்டிடததுக்கு அஸதிவாரக்கல் நாட்டியது ராஜாஜி என்பது ஞாபகமிருக்கலாம்.

வாராததுபற்றி ஸ்ரீமதி சரோஜினியின் கடிதம்

தாம் வர இயலாதது பற்றி ஸ்ரீமதி சரோஜினிதேவி ராஜாஜிக்கு அனுப்பியுள்ளகடிததத்தில் "என் பிரதம மந்திரியும் இதர மந்திரியும் நான் இபபோது இங்கிருந்து போகக் கூடாது என்று ஆலோசனை சொல்லுவதால் நான் எட்டையாபுரத்துக்குச் செல்லும் உத்தேசத்தை கை விட வேண்டியிருக்கிறது. அங்கு செல்ல முடியாதது எனக்கு ஏமாற்றமே. கடமை காரணமாகவே நான் இங்கு இருக்க வேண்டியிருக்கிறது. நான் மேலும் யாத்திரை செய்யக் கூடாதென்பது வைத்தியர்கள் கட்டளை. ரயிலில் பயணல் அதிக நாட்கள் பிடிக்கும். அதனால்தான் நான் வர முடியவில்லை" என்று கூறியுள்ளார்.

பட்டம்மாள் பாடிய பாரதி பாட்டுக்கள்

ரிக்கார்டு விற்று வரும் பணம் பாரதி நிதிக்கு

பாரதி தின கொண்டாட்டத்தை ஒட்டி கொலம்பியா கம்பெனியார் வெளியிடடிருக்கும் ரிக்கார்டு (ஜி. ஈ. 6423) வரப்பெற்றோம். ஸ்ரீமதி டி. கே. பட்டம்மாள 'சினனஞ்சிறு'கிளியே' "தொன்று நிகழ்ந்த" ஆகிய பாரதி பாடல்களை வெகு இனிமையாகப் பாடியிருக்கிறார்.

ஸ்ரீமதி பட்டம்மாளுக்கு கிடைக்கும் "ராயல்டி" வருமானமும் கம்பெனிக்கு வரும் லாபபணமும் பாரதி நிதிக்கு அளிகபபடும் என்பது குறிப்பிடத்தக்கது.

மூன்றரைக் கோடி ரூபாய் நஷ்டம்

பாக்கிஸ்தான் ரயில்வேக்களுக்கு

கராச்சி, அக். 5

பாக்கிஸ்தானிலுள்ள வடமேற்கு ரயில்வேயில் இந்தியாவிலிருந்துவரும் அகதிகள் டிக்கட் இல்லாமல் பயணம் செய்வதாலும நிலக்கரி பஞ்சத்தாலும அக்டோபர் 15-ம் தேதியோடு முடியும் இரண்டு மாத காலத்தில் மூன்றரைக் கோடி ரூபாய் நஷ்டமேற்பட்டிருக்கிறது கிழக்கு வங்காள ரயிலவேக்கும நஷடம் ஏற்பட்டிருக்கிறது ரயிலவே போக்குவரத்துக்கு நிலக்கரிப் பஞ்சாப் கலகத்தால் பெரும் துடைஞ்சல் ஏற்பட்டுள்ளது. (அ - பிரஸ்)

வீட்டு வாடகை லஞ்சம் வாங்கியதாக

பம்பாய் ஸொலிஸிட்டர் கைது

பம்பாய், அக். 5

லஞ்சம் வாங்கிக்கொண்டு வீட்டை வாடகைக்கு கொடுத்ததாக பம்பாய் ஸொலிஸிடடர் நந்தலால் பதவாரியும் அவரது குமாஸதாவும் கைது செய்யப்பட்டனர். ரகசியப் போலிசார் லஞ்சம் கொடுப்பவருடன் சேர்ந்து 4500 ரூபாய் நோட்டுகளில் அடையாளமிட்டு இந்த லஞ்சத்தைக் கண்டுபிடித்தனர். இருவரிடமும் ஜாமீனில் விடுதலை செய்யபபட்டிருக்கின்றனர்.

பாரசீக பிரதமர் மீது நம்பிகைகை

ரஷிய ஆயில் ஒப்பந்தம் இனி சமர்ப்பிக்கப்படும்

டெஹ்ரான், அக் 5

இன்று பாரசீக பார்லிமெண்ட் பாரசீக பிரதம மந்திரி கவாமின் சர்க்கார் மீது நம்பிக்கைத தீர்மானம் நிறைவேற்றியது. ரஷிய - பாரசீக ஆயில் ஒப்பந்த நகலை இனி பிரதமர் பார்லிமெண்டில் சமர்ப்பிக்க முடியும்.

பிரதம மந்திரி பார்லிமெண்டில் பேசியபோது பின்வருமாறு தெரிவித்தார்:-

தற்காலத்திற்கு பொருத்தமிலலாத பாரசீக அரசியல் திட்டத்தை மாற்றியமைக்க கூடிய சீக்கிரம் பாரசீக செனட் சபை கூட்டப்பட வேண்டும மூன்று வலலரசுகள் ஒப்பந்தப்படி ரஷியா தன் துருபபுகளை காலிசெய்யாதிருந்ததுபற்றி சென்ற வருடம் பாரசீகம் ஐக்கிய தேசஸதாபனத்திற்கு முறையிடடிருந்தது பற்றி ஆலோசிகக பார்லியெண்டின் ரகசியக் கூட்டம நடைபெற வேண்டும். பாரசீகததில் நெருக்கடியான நிலையிருந்து வநவதாக ஐக்கிய தேசஸதாபன நடவடிக்கைக் குறிபபிலிருந்து வரும் விஷயத்தைப் பற்றி புனராலோசனை செய்வேண்டும. (ராய்ட்டர்)

மலேயாவின் புதிய அரசியல் திட்டம்

கவர்னர் ஜெனரல் பிரசங்கம்

சிங்கப்பூர், அக். 5

மலேயா யூனியன் சிங்கப்பூர் கவர்னர் ஜெனரலான மல்கம் மாக்டொனல்ட் இன்றிரவு மலேயாவுக்கு வழங்கபபடுப புதிய ஐகிய அரசியல திட்டம் பற்றிப பேசினார். இதற்கு முன்னுள்ள திட்டங்களை விட அது முன்னேற்றமுடையதென்றும், சுயாடசியை நோக்கி முன்னேற அது அநுகூலமாக இருககுமென்றும் சகல வகுப்பினரும சமரசமாக ஏற்றுக் கொள்ளக் கூடியதென்றும, மலேயாவைத் தாயகமாகக் கொண்டு மலேயா சர்க்காரிடம் விசுவாசமாக இருக்கும் எல்லா வகுப்புகளையும் சேர்ந்தவர்களுக்கு அதன்படி சமரசமான பிரஜா உரிமை வழங்கப்படுமென்றும் அவர் தெரிவித்தார். (ராய்ட்டர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹைதராபாத் சமஸ்தானத்தில் சதிச் செயல்கள்

ஹிந்துக்களைக் கொல்ல முஸ்லிம் ஸதாபனத்தின் போர்க்கோலம்

பிரிட்டிஷ் அதிகாரியின் உதவி

புதுடில்லி, அக். 3

ஹைதராபாத் ஹிந்துக்களை படுகொலை செய்ய பெரிய அளவில் ஏற்பாடான முறையில் ஒரு திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. அஞ்சுமன் இத்திஹாதுல் முஸ்லிமீன் சங்கத்தை ஆட்டிவைக்கும் தலைவர்களில் ஒருவரிடமிருந்து இந்தத் தகவல் கிடைத்தது.

படுகொலை செய்வதற்காக நிர்ணயிக்கப்பட்டிருக்கும் தேதி ரகசியமாக வைக்கப்பட்டிருக்கிறது. ஹிந்துக்கள் ஏ. பி. ஸி என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறார்களென நம்பப்படுகிறது. உத்தியோகப்பற்றற்ற முறையில் பிராஸிகூஷன் செய்யப்படுவதற்காகவுள்ள ஜாபிதாவில் பலருடைய பெயர்கள் காணப்படுகின்றன. சமஸ்தானத்தில் மிகப் பெரிய நிலச்சுவான்தார்களில் ஒருவரான ராஜா சாமராஜ பகதூரின் பெயர் ஜாபிதாவில் காணப்படுகிறது.

படுகொலைத் திட்டம் ரொம்ப ரகசியமாக வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் உடனடியாக சர்க்காரில் மாறுதல் வேண்டுமென்று கோரும் இயக்கத்தை நசுக்குவதற்காக பிரம்மாண்டமான அளவில் ஒரு படுகொலை இயக்கத்தை நடத்துவதற்கு திட்டம்போடப்பட்டிருக்கிறதென ஆதாரத்துடன் சொல்ல முடியும்.

வெளியில் வேலையிழந்து ஹைதராபாத்துக்கு வரவரும் முஸ்லிம்கள் பெருவாரியாக வந்து குடியேறுவதற்கு அஞ்சுமன் உதவியளிக்கிறது. நிஜாமும் அவருடைய சர்க்காரும் இதற்கு உதவிசெய்கின்றனர்.

ராஜிநாமாச் செய்துள்ள பிரதம மந்திரி சத்தாரி நவாப் தாம் பதவியைவிட்டுச் சென்றபின் படுகொலைகள் நடக்குமென சூட்சமாகத் தெரிவித்திருக்கிறார்.

கொஞ்சகாலமாக துப்பாக்கிகள் முதலிய ஆயுதங்கள் பிரிட்டிஷ் ராணுவ அதிகாரிகளின் உதவியுடன் ஹைதராபாத்துக்குள் வந்துகொண்டிருந்தன என்று தெரிகிறது.

பெரிய அமெரிக்க டாங்கிகளான ஷெர்மன் டாங்கிகள் சுமார் 200 வெறும் குப்பை இருப்பு என்றுசொல்லி நிஜாம் சர்க்காருக்கு விற்கப்பட்டிருக்கின்றன என்று ஒரு இந்திய அதிகாரி கூறினார்.

ஹைதராபாத்திலிருந்த கடைசி பிரிட்டிஷ் ரெஸிடென்ட் ஸ்ரீ ஸி. ஜி. ஹியூபர்ட். நிஜாம் சர்க்காருக்கு 350,000 ரவுண்டுகள் குண்டுகளைக் கொடுக்கும்படி திருமலைகெர்ரியில் உள்ள இந்திய ராணுவ கமாண்டருக்கு ஆக. 13-ம் தேதியன்று உத்தரவிட்டாரென்பது உண்மையே. இந்திய தற்காப்பு இலாகாவிடமிருந்து அனுமதி வரவேண்டுமென்று கூறி அந்த அதிகாரி இந்த உத்தரவுப்படி நடக்க மறுத்துவிட்டார்.

நாச வேலையை ஆரம்பிப்பதற்கு ஒரு தந்திரத்தை கையாள திட்டம் போடப்பட்டிருக்கிறது. சில முஸ்லிம்கள் கதர் சட்டை, காந்தி குல்லாய் தரித்துக்கொண்டு சில முஸ்லிம்களின் வீட்டுக்கு தீ வைப்பர்; அஞ்சுமன் தலைவர் ஒருவரின் வீட்டுக்கு தீ வைக்கமுயற்சிசெய்வர். ஹிந்துக்களின் "இந்த அநியாயத்துக்கு" பதில் நடவடிக்கை எடுக்க இது ஒரு சாக்காகக்கொள்ளப்படும்.

வாரங்கால்லிலிருந்து வெளியேறும் ஹிந்துக்களுக்குப் பதிலாக பக்கத்துக் கிராமங்களில் உள்ள முஸ்லிம்கள் கொண்டு வரப்படுகிறார்கள்.

ஹைதராபாத் ஹிந்து மகா சபை பொதுக் காரியதரிசி ஸ்ரீ வீரபத்ர ராவ், நிஜாம் நிர்வாக சபைத் தலைவருக்கு பின்கண்ட தந்தியை அனுப்பியிருக்கிறார்:-

ஆயிரக்கணக்கான முஸ்லிம் அகதிகள் தினந்தோறும் சமஸ்தானத்திற்குள் வந்துகொண்டிருக்கிறார்கள். தங்கள் பந்தோபஸ்துக்கு அபாயம் ஏற்பட்டிருக்கிறதென ஹிந்துக்கள் அஞ்சுகிறார்கள். மேற்கொண்டு அகதிகள் வருவதைத் தடுக்கவும் ஏற்கெனவே வந்தவர்களை திருப்பியனுப்ப ஏற்பாடு செய்யவும் பொது பந்தோபஸ்தை உத்தரவாதம் செய்யும் நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவும்.

இக்காலத்து அசோகர் காந்திஜி

அவருடைய கல்கத்தா சாதனை உலகப் பிரசித்தமாகிவிட்டது

ராஜாஜி பிரசங்கம்

கல்கத்தா, அக். 3

"காந்திஜி கல்கத்தாவில் சாதித்தது இப்பொழுது உலகப் பிரசித்தமான விஷயமாகிவிட்டது" என்று காந்தி ஜெயந்தியை முன்னிட்டு காங்கிரஸ் சாஹித்திய சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற சூத்திர யக்ஞத்தில் பேசுகையில் மேற்கு வங்க கவர்னர் ராஜாஜி கூறினார்.

சர்க்காரின் முக்கிய பகுதியாகிய சக்கரம் இந்திய தேசியக் கொடியில் இடம் பெற்றுள்ளதைக் குறிப்பிட்டு "இந்தியாவுக்கு விதி வகுத்துத்தந்த மகா அசோகரிடமிருந்து நமக்கு இது கிடைத்தது: இக்காலத்து அசோகர் காந்திஜி" என்றார் ராஜாஜி.

ஸ்விட்ஜர்லாந்தில் கொண்டாட்டம்

ஜினிவா, அக். 4

ஜினிவாவிலும் லாஸானிலும் உள்ள இந்தியரும் சுமார் 500 சுவிஸ் பிரஜைகளும் நேற்றிரவு இங்கு காந்தி ஜெயந்தியைக் கொண்டாடினர்.

காந்திஜியின் நெருங்கின பண்பரும் இந்தியா-சுவிஸ் சங்கத் தலைவருமான புரபஸர் எச் மண்ட்டரீவாட் "காந்தி இந்தியாவைப் போல் உலகுக்கு சொந்தம்" என்றார். அவருடைய வழியைப் பின்பற்றினால் தான் உலக சமாதானம் நிலைக்கும் என்றார்.

மைனாரிட்டிகளின் உரிமைகளும் கடமைகளும்

சஹ்ரவர்தி தயாரிக்கும் சாசனம்

புதுடில்லி, அக். 3

மைனாரிட்டிகளின் கடமைகளும் உரிமைகளும் பற்றிய சாசனம் ஒன்று ஸ்ரீ சுஹ்ரவர்தியினால் தயாரிக்கப்படிருப்பதாகத் தெரியவருகிறது. இத்த இரண்டு டொமினியன்களிலுள்ள மைனாரிடிகளுக்கு பொதுவாக செல்லுபடியாகக் கூடியது.

காயிதே ஆஸாம் ஜின்னா, ஸ்ரீ லியாகத் அலிகான், பண்டித ஜவஹர்லால் நேரு, சர்தார் வல்லபாய் பட்டேல் ஆகியோர் நடன சென்ற சில நாட்களாக ஸ்ரீ சஹ்ரவர்தி நடத்திய பேச்சு வார்த்தைகளை அடிப்படையாகக் கொண்டு இச்சாசனம் தயாரிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்த சாசனத்தைப்பற்றி தான் ஸ்ரீ சஹ்ரவர்தி காந்திஜியுடன் சென்ற இரண்டு நாட்களாக விவாதித்துக்கொண்டிருந்ததாகக் கூறப்படுகிறது

இன்று காராச்சி சேர்ந்திருக்கும் ஸ்ரீ சஹ்ரவர்தி, ஜனாப் ஜின்னாவிடம் இந்த சாசன நகலை சமர்ப்பிப்பார் எனத் தெரிய வருகிறது.

ஜின்னாவும் காந்திஜியும் இதை ஒப்புக்கொண்ட பற்கு, இது பாக்கிஸ்தான், இந்தியூனியனின் சர்க்கார்களிடம் சமர்ப்பிக்கப்படும்.

ஐ. மா. காவல் படை பற்றி பாகிஸ்தான் தகவல் கேட்டது

ஓம்கார் சிங் உஷார்!

இந்தியா சர்க்காரைக்கேள் என்றார்

லக்ஷ்மணபுரி, அக் 3

பாக்கிஸ்தான் மவு இலாகா டைரக்டர் ஜெனரல் ஐக்கிய மாகாண காவல்படைத் தலைவருக்கு ஒரு தந்தியனுப்பியிருந்தார். ஐ மா. காவல்படை போல் பாக்கிஸ்தானிலும் ஒன்று ஆரம்பிக்க வேண்டுமென்றும் ஆகவே அந்தத் திட்டத்தின் முழுவரைதையும் தலைக்கு அனுப்பும்படியும் இத்தகுதி மூலம் பாகிஸ்தான அதிகாரி கேட்டார் இதற்கு ஐ மா காவல் படை தளபதி ஸ்ரீ ஓம்கார்சிங் அனுப்பிய பதிலில் ஷை கோரிக்கைக்கு தயவால் ஆணைக இயலாதென்றும் இதுபற்றிய விவரம் தெரிய வேண்டுமானால் இந்திய சர்க்காரைக் கேட்டுக்கொள்ளும்படியும் கூறிவிட்டார்.

சாஅர் பொதுத்தேர்தல்

பிரான்ஸின் திருப்தி

சாஅர் பிரக்கன், அக் 5

சாஅர் பொதுத் தேர்தலில் இன்று 70 சதவிகிதம் வோட்டுகள் பதிவு செய்யப்பட்டுவிட்டன. பிரான்சுடன் பொருளாதார சம்பந்தமிருக்க வேண்டுமென்ற மூன்று கட்சிகள் பெருவாரியாக வெற்றி பெற்றிருப்பது கண்டு பிரான்ஸ் திருப்தியடைந்திருக்கிறது. பிரான்சின் சம்பந்தத்தை விருப்பாத கம்யூனிஸ்டுகட்சி சிறுபான்மையாகவே இருக்கும். (ராய்ட்டர்)

இந்திய பாதுகாப்புக் கமிட்டிக் கூட்டம்

பல ராணுவ விஷயங்களை கமிட்டி கவனிக்கும்

புதுடில்லி, அக் 4

மந்திரி சபையின் புதிதாக அமைக்கப்பட்ட பாதுகாப்புக் கமிட்டி இன்று காலை தனது முதல் கூட்டத்தை நடத்தியது. பிரதமர் பண்டித நேரு தலைமை வகித்தார். உதவிப் பிரதமர் சர்தார்படேல், பாதுகாப்பு மந்திரி சர்தார் பல்தேவ் சிங், நிதி மந்திரி ஸ்ரீ ஷண்முகம் செட்டி ஆகியோரும் இந்தியப் படைகளின் சீனியர் ராணுவ அதிகாரிகளும் கூட்டத்துக்குவந்திருந்தனர்

பிரிட்டன் முதலிய நாடுகளில் இருப்பதுபோல இந்தக் கமிட்டி மந்திரிசபையின் நிரந்தரக் கமிட்டியாக இருக்கும். இந்தியப் படைகளை தேசிய மயமாக்குவது கமிட்டியின் முக்கிய வேலை இந்தியப் படைகளில் உள்ள பிரிட்டிஷாரை ஒப்பந்தங்களை முடிவுக்குக் கொண்டுவர இந்திய-பாக்கிஸ்தான டொமினியன கூட்டம் முடிவு செய்திருக்கின்றன. அம்முடிவால எழும் பிரச்னையைக் கவனிப்பதும் கமிட்டியின் முக்கிய வேலையாகும்.

சீனியர் ராணுவஅதிகாரிகள் டெக்னிகல் அதிகாரிகள், இலாகாத் தலைவர்கள் என்ற மூன்று வகைப் பிரிட்டிஷ் அதிகாரிகள் இந்திய ராணுவத்தில் உள்ளனர். கடைசி இரண்டு வகை அதிகாரிகளை நீக்குவதால் சிரமம் ஏற்படும். இதுபற்றி பல யோசனைகள் பரிசீலனை செய்யப்படுவதாகத் தெரிகிறது. தேவைப்படும் பிரிட்டிஷ் அதிகாரிகளுடன் ஒப்பந்தம் செய்து கொள்வது, பிரிட்டிஷ் ராணுவத் தூதுக் கோஷ்டியினரை ஆலோசனையாளராகக் கொள்வது போன்ற ஏதாவது ஒரு முறை ஏற்படுத்தப்படலாம்.

ராணுவத்தலைமை தொகை, செலவுகள் பற்றியும் கமிட்டி பரிசீலனை செய்யும். உள்நாட்டு பந்தோபஸ்து செலவுக்கு ராணுவத்தை உபயோகிக்கலாமா, துரிதமாகப் பெரிதாகக்கொள்ளக்கூடிய சிறிய தற்காப்புப் படையாக ராணுவம் இருக்க வேண்டுமா, அல்லது பெரிய நிரந்தரப் படை வேண்டுமா முதலிய விஷயங்களை கமிட்டி கவனிக்கும். இவை நிதி-பொருளாதார பிரச்னைகளை எழுப்பக்கூடியவையாகையால் தர யோசித்தே முடிவு செய்யவேண்டும்.

இந்திய டொமினியன் பிரதேசங்களின் பந்தோபஸ்து தற்காப்புபற்றிய சகல பிரச்னைகளையும் இக் கமிட்டியே பரிசீலனை செய்யும்.

ஐ. மா. காவல் படை பற்றி பாகிஸ்தான் தகவல் கேட்டது

ஓம்கார் சிங் உஷார்!

இந்தியா சர்க்காரைக்கேள் என்றார்

லக்ஷ்மணபுரி, அக் 3

பாக்கிஸ்தான் மவு இலாகா டைரக்டர் ஜெனரல் ஐக்கிய மாகாண காவல்படைத் தலைவருக்கு ஒரு தந்தியனுப்பியிருந்தார். ஐ மா. காவல்படை போல் பாக்கிஸ்தானிலும் ஒன்று ஆரம்பிக்க வேண்டுமென்றும் ஆகவே அந்தத் திட்டத்தின் முழுவரைதையும் தலைக்கு அனுப்பும்படியும் இத்தகுதி மூலம் பாகிஸ்தான அதிகாரி கேட்டார் இதற்கு ஐ மா காவல் படை தளபதி ஸ்ரீ ஓம்கார்சிங் அனுப்பிய பதிலில் ஷை கோரிக்கைக்கு தயவால் ஆணைக இயலாதென்றும் இதுபற்றிய விவரம் தெரிய வேண்டுமானால் இந்திய சர்க்காரைக் கேட்டுக்கொள்ளும்படியும் கூறிவிட்டார்.

காத்தியவார் சமஸ்தானத்திற்கு இந்திய துருப்புகள்

தமிழ் தளபதி தலைமையில் கடற்படைகள் இறங்கின

ஜூனாகத் சமஸ்தான நடவடிக்கையால் ஏற்பட்டுள்ள நெருக்கடி

புதுடில்லி, அக். 4

பிரதம மந்திரி காரியாலயம் விடுத்துள்ள அறிக்கை கூறுவதாவது:-

காத்தியவார் சமஸ்தானம் ஒன்று வேண்டியதன் பேரில் போர்பந்தருக்கு ஒரு சிறு ராணுவப் படை அனுப்பப்படுகிறது இந்தியக் கடற்படையைச் சேர்ந்த கப்பல்கள் அந்தப் படையை அக்டோபர் 5-ம் தேதி போர்பந்தரில் இறக்கும்.

இவ்விதம் துருப்புகள் அனுப்பப்படுகையில் எல்லாவித படைகளும் ஒன்று சேர்ந்து இயங்குவதற்கான பயிற்சியும் நடத்தப்படும்.

தளபதி கோத்தாரி தலைமையில் ஆறு கப்பல்கள் கொண்ட கடற்படை. மேஜர் ஜாக் தலைமையில் இரு பட்டாளங்கள் அடங்கிய தரைப்படை. தளபதி தலைமையில் 8-வது ஸகுவாட்ரன் விமானப்படை ஆகியவை இப்பயிற்சியில் கலந்து கொள்கின்றன.

போட்டி சர்க்கார்

ராஜகோட்டை. அக் 4

காத்தியவார் ஆண், பெண்கள் அனைவரும் ஜூனாகட் போட்டி சர்க்காருக்கு தார்மிக ரீதியிலும் சகல சாதனங்களையும் அளித்தும் பரிபூரண ஆதரவு கொடுக்கவேண்டும் என்று காத்தியவார் அரசியல் மகாநாட்டின் நிர்வாகக் கமிட்டி வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

முஸ்லிம்களுக்கு

நவாபை எதிர்த்துப் போர் நடக்கிறதே தவிர முஸ்லிம்களை எதிர்த்து அல்ல என்பதை ஜூனாகத் முஸ்லிம்களும் காத்தியவார் முஸ்லிம்களும் உணர வேண்டும் என்று கோரி கமிட்டி விசேஷ வேண்டுகோள் விடுத்திருக்கிறது வரப்போகும் அபாயத்தைத் தவிர்க்க ஜூனாகத், பாக்கிஸ்தான் சர்க்கார்கள் மீது முஸ்லிம்கள் தங்களுக்கு இருக்கும் அபார செல்வாக்கு முழுவதையும் பிரயோகிக்க வேண்டும் என்று கமிட்டி கேட்டுக்கொள்கிறது.

மற்ற மன்னர்களுக்கு பயம் வேண்டாம்

காத்தியவார் மன்னர்களுக்கு நிர்வாகக் கமிட்டி அறிவிப்பதாவது:-

ஜூனாகத் நவாப் வேற்று அரசாங்கத்துக்கு விஸுவாசம் செலுத்துவதால் ஏற்பட்ட நெருக்கடி நிலைமையின் காரணமாகவே போட்டி சர்க்கார் அமைக்கும் கடும் நடவடிக்கையில் இறங்க நேர்ந்தது அசாதாரணமானதும் விதிக்கு வலக்கானதுமான இந்த நடவடிக்கையினால் அரசியல் மகாநாட்டின் நோக்கங்களபற்றி மன்னர்கள் மனதில் வகற்பம் ஏற்படாது எனக் கமிட்டி நம்புகிறது

தமது முடிவை மாற்றிக் கொள்ளும்படி ஜூனாகத் நவாபுக்கு ஒரு காத்தியவார் மன்னர் (ஜாம் சாஹிப்) அப்பட்டமாகப் புத்திமதி கூறியதற்கு கமிட்டி திருப்தி தெரிவிக்கிறது.

போட்டி சர்க்கார்பற்றி மன்னர்கள் மனதில் உள்ள பயங்களைத் தெளிவுக்குப்படி நவாநகர் ஜாம் சாஹிபுக்கு போட்டி சர்க்கார் தலைவர் ஸ்ரீ சமால்தாஸ காந்தி கடிதம் எழுதியிருப்பதாகத் தெரிகிறது.

தரங்காரா மன்னர் அறிக்கை

ராஜகோட்டை, அக். 4

பாக்கிஸ்தானில் சேர்ந்த ஜூனாகத்தின் தவறான அசாதாரணமான செயல்பற்றி ஆத்திரம் தெரிவித்து தரங்காரா மகாராஜா ஒரு அறிக்கை விடுத்துள்ளார். ஆனால் இது காரணமாக இரு டொமினியன்களுக்கிடையே யுத்தம் வரும் என்றவதந்தியைத் தம் சார்பில் அவர் மறுக்கிறார்.

150 வருடங்களுக்கு முன் இந்தியாவில் இருந்த நிலைமையை உண்டுபண்ணி மீண்டும் அடிமைகளாகும் அபாயத்தை வருவித்துக்கொள்ளக் கூடாதென அவர் எச்சரிக்கிறார்

"காத்தியவாரில் தோன்றிய மகா சிரேஷ்டரான காந்திஜியின் உன்னத சமாதான முயற்சியைக் குலைக்கும்படி காத்தியவாரில் யுத்தத்திற்கு இடம் கொடுக்கக்கூடாது" என அவர் வேண்டுகிறார்.

ஜூனாகட் பிரச்னையை சமாதான முறையில் பைசல் செய்யும்படி காத்தியவார் மன்னர்கள், ஜனங்களையும் அவர் கேட்டுக்கொள்கிறார்.

பாக்கிஸ்தானில் சேரும் முடிவை மாற்றிக் கொள்ளும்படி அவர் ஜூனாகத் நவாபுக்கு எழுதிய கடிதத்துக்குப் பதிலே இல்லை.

யுத்த நிறுத்த உத்தரவு கௌரவிக்கப்பட வில்லை

ஜாவாபற்றி ஸதானிகர் அறிக்கை

உடனே வேலையைத் தொடங்க மத்தியஸ்த போர்டுக்கு உத்தரவு

நியூயார்க், அக். 4

நேற்று இந்தோனேஷிய பிரச்னைபற்றி ஐ நா. பாதுகாப்பு சபையில் மீண்டும் விவாதம் ஆரம்பமாயிற்று. ஸதானிகர்கள் பரிசீலனை கமிட்டி சமர்ப்பித்த அறிக்கைமீது விவாதம் நடந்தது. யுத்த நிறுத்த உத்தரவு பூரணமாக கௌரவிக்கப்படவில்லையென்று அந்த அறிக்கை கூறுகிறது

அந்த அறிக்கை கூறுவதாவது:- ஜூலை 20-ம் தேதிக்கும் ஆகஸ்ட 4-ம் தேதிக்கும் மத்தியில் டச்சு படைகளின் முன்னேற்றமானது முன்னணிப் படையின் ரீதியில் இருந்தது. குடியரசுத் துருப்புளின் முக்கியமான பகுதிகளை பின்வாங்கி அந்த முன்னணிப் படைகளின் மத்தியில் இருந்தன. டச்சு முன்னணிப் படைகளின் மத்தியிலிருந்த குடியரசு துருப்புகள் பொசுக்கல் கொள்கையை கையாண்டன. முக்கியமாக சீனர்களை கொள்ளையிட்டன. முன்னணி படைகளுக்கு மத்தியிலுள்ள பிரதேசத்தில் டச்சுக் துருப்புகள் பலப்படுத்த முயன்றன இதனால் யுத்த நிறுத்த உத்தரவு அலட்சியம் செய்யப்பட்டு யுத்தம் தொடர்ந்து நடந்தது.

அறிக்கையில் வர்ணிக்கப்படிருப்பதுபோல் நிலைமை இருக்கும்படசத்தில் பாதுகாப்புக் கவுன்ஸிலின் உத்தரவை அமுலுக்குக் கொண்டுவரவில்லையென்பது வெளிப்படையென்று ஆஸ்திரேலிய வெளிநாட்டு மந்திரி இவாட் கூறினார்.

பாதுகாப்பு கவுன்ஸிலின் மத்தியஸ்தர் போர்டு உடனே வேலையைத் தொடங்கவேண்டுமென்று ஸ்ரீ இவாட் ஒரு பிரேரணை கொண்டுவந்தார்.

ஸ்ரீ இவாட்டை கண்டித்து ரஷியாவின் பிரதிநிதி கிரோமிகோ பேசுகையில் அது மக்களின் கண்ணில் மண்ணைப் போடுவதாயிருக்கிறதென்றும் அதனால் பிரயோசனம் எதுவுமே ஏற்படாதென்றும் கூறினார் யுத்தம் ஆரம்பமாகுமுன்பு இருந்த எல்லைக்கு திரும்புமபடி இரு நாடுகளுக்கும் உத்தரவு பிறப்பதுதான ஒரே வழியென்று ஸ்ரீ கிரோமிகோ கூறினார்.

ஆஸ்திரேலியாவின் பிரேரணை நிறைவேறியது பாதுகாப்புக் கவுன்ஸில் செவ்வாய்க்கிழமைக்கு ஒதிப்பாடப்பட்டது

சட்ட விரோத யூதப் படை எடுப்பு

பாமாகுஸ்டா, அக். 5

பாமாகுஸ்டாவுக்கு இன்று வந்துசேர்ந்த பிரிட்டிஷ் படகு 835 யூதர்களைகொண்டு வந்தது. வேறு இரு கப்பல்கள் 800 க்கு அதிக பேர்களை ஏற்கெனவே இன்றுகாலை கொண்டு வந்துவிட்டது. (ராய்ட்டர்)

மதருஸி துருப்புகள் உண்ணாவிரதம்

காந்தி ஜெயந்திக்கு விடுமுறை அளிக்காததற்கு ஆட்சேபனை

பம்பாய், அக் 4

கொலாபாவில் இருக்கும் மதருஸி பட்டாளத்தைச் சேர்ந்த 300 பேர்கள் தங்கள் பிரிட்டிஷ் தளபதி மேஜர் பால், காந்தி ஜெயந்தியன்று விடுமுறை அளிக்க மறுத்ததை ஆட்சேபித்து வியாழக்கிழமையன்று 12 மணி நேரம் உண்ணாவிரதம் இருந்தார்கள். டில்லியிலுள்ள தலைமைக் காரியாலயத்திலிருந்து விடுமுறை கொடுக்கும்படி உத்தரவு வந்தும் அந்த பிரிட்டிஷ் தளபதி விடுமுறை அளிக்க மறுத்துவிட்டாராம் அந்த உத்தரவு அவருக்கு வியாழக்கிழமை காலை 8 மணிக்குத்தான் கிடைத்ததென்று அவர் தெரிவித்தாராம்.

இந்தோனேஷியாவுக்கு இந்தியாவின் ஸ்தானாதிபதி

திரு. என். ராகவன் பயணம்

புதுடில்லி, அக் 5

இந்தோனேஷியாவுக்கு இந்திய சர்க்காரின் ஸதானாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ள திரு. என். ராகவன் தனது மனைவியுடன் இவ்வாரம் படேவியாவுக்கு விமான மார்க்கமாக பயணமாவார்.

[அ-பிரஸ]

கடற் கண்ணி வெடியால 30 பேர் மாண்டனர்

ஹாங்காங், அக். 5

ஒரு சீன மோட்டார் படகு ஒரு கடற கண்ணியில் மோதியதின் காரணமாக 30 பிரயாணிகள் மாண்டதோடு 44 பேர் படுகாயம் அடைந்தார்கள். ஷை சம்பவம் டயிப்போ நகரக்கரையாநடைபெற்றது ராய்ட்டர்

அரிய நூல் வெளிவந்து விட்டது!

பாக்கிஸ்தான் விளக்கம்

ஜனாப் துர்ராணி அவர்களால் எழுதப்பட்ட "MEANING OF PAKISTAN" என்ற நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு பாக்கிஸ்தானைப் பற்றி இம்மாதிரியான நூலொன்று இதுவரை தமிழில் வெளியானதில்லை.

அழகிய முகப் படம்

320 பக்கங்கள் கிளேத் கடிதம்

சொற்ப பிரதிகளே அச்சிடப்பட்டிருக்கின்றன.

முந்தங்கள் விலை ரூ. 3-50
இந்தியா ரூ. 3-8-0.
V. P. வேறு

கிடைக்கும் இடங்கள்:-

V. M. ஷம்சுத்தீன்,
85, பழைய சோனகத்தெரு,
கொழும்பு.

எல். கே. ஷேக் முகம்மது,
பிரதர்ஸ் (மரைக்கார் கடை)
பூக்குளம் பார்க்கிற்கு எதிரே
திருச்சினாப்பள்ளி

கட்டிடத்துக்கு தேவையான சிமந்தும் மற்றச் சாமான்கள் எல்லாம் எங்களிடம் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

என். வயித்திலிங்கம் - கொம்பனி,
No-38. மூன்றுங் துறுக்குத் தெரு,
புறக்கோட்டை, கொழும்பு

டெலிபோன். 2029

டெலிகிராம்: ENVAITLIN

கிளை:- பெரியகடைத் தெரு,
யாழ்ப்பாணம், டெலிபோன்: 30.

கதம்பைக் கயிறு

இந்நொட்டை கதம்பைக் கயிறுகளும் தும்பால் செய்யப்பட்ட சாமான்களும் நேரிலோ தபால் மூலமோ பெற்றுக்கொள்ளலாம் ஆர்டர்களுக்கு தேவையான சாமான்கள் குறித்து நோத்தில் செய்து கொடுக்கப்படும் மொத்த வியாபாரிகளுக்கும் சில்லறை வியாபாரிகளுக்கும் விசேஷ சலுகை உண்டு

விலை விபரங்களுக்கு எழுதுங்கள்.

A. Abdul Kalyoom,
Coir Ropes
Manufacturer at Gintota
No 44, Wolfendahl Street
Colombo.

ஏ. அப்துல் கையூம்,
44, ஆதிருப்பள்ளித்தெரு
கொழும்பு.
கயிற்றுத் தொழிற்சாலை,
கிந்தோட்டை,

கட்டிட வேலைக்கு வேண்டிய எல்லா விதமான சாமான்களும் குறைந்த விலையில் கிடைக்கும் இடம்

செட்டிநாட் கார்ப்பொரேஷன் லிமிட்ட்
116/118 கெய்சர் வீதி,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காந்தி திருநாள்

"காந்தி உலகிற்கே உரிய மகான்"

"ஆசிய தேசியத்தின் தந்தை அவரே"

கொழும்பில் காந்தி ஜெயந்தி விழா

கொழும்பு, அக். 6

கொழும்பில் காந்தி ஜெயந்தி விழாவை முன்னிட்டு நேற்றும் நேற்று முன் தினமுமாக இரண்டு பொதுக் கூட்டங்கள் நடைபெற்றன.

லேபாட்ஸ் புரோட்வேயில் நேற்று முன் தினம் நடந்த பொதுக் கூட்டத்தில் பேசிய திரு. ஏ. எம் கே. குமாரசாமி "காந்தி இந்தியாவுக்கு மட்டும உரியவரல்ல, உலகிற்கே உரியவர்" என்று குறிப்பிட்டார்.

திரு. பீட்டர் கெனமன், ஸ்ரீமதி ஆயிஷா ரசூல், ஜனாப் ஏ ஆர். ஏ. ராஸிக், திரு. வள்ளியப்பச் செட்டியார், திரு. கே. ராமநாதன் முதலிய பலர் இக்கூட்டத்தில் பேசினார்கள்.

அன்பர் பூபதி தாசர் மேற்படி கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

நேற்று விவேகானந்த சபை மண்டபத்தில் காந்தி ஜெயந்தி விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இங்கு பேசும் போது பீட்டர் கெனமன் கீழ்கண்டவாறு குறிப்பிட்டார்: "மகாத்மா காந்தி இந்தியதேசிய இயக்கத்தின் தந்தை என்றுகருதப்படுகிறார். உண்மையில்அவர் ஆசியாவின் தேசிய இயக்கத்திற்கே தந்தை ஆவார்.

"இலங்கையின் அரசியல் இன்று இங்குள்ள சில பெரிய மனிதர்களையும் அவர்களது பந்தமித்திரர்களையுமே சுற்றிச் சுழல்கிறது. ஆனால் சுதந்திர இயக்கம் வெற்றி அடைய வேண்டுமானால் அரசியல் போராட்டத்தில் தொழிலாளியும் விவசாயியும் அணிதிரள வேண்டும்."

திரு. தேவர் சூரியசேனதமது பேச்சிலே "சிங்களசமூகத்தைச் சேர்ந்தவன் என்ற ஹோதாவிலே இலங்கையைத் தாயகமாகக் கொண்ட இந்திய சகோதரர்களுக்கு நீதி வழங்கியாக வேண்டும் என்று நான் கருதுகிறேன்" என்று குறிப்பிட்டார்.

பார்லிமெண்ட் அங்கத்தவர் திரு. கே. கனகரத்தினம் பேசுகையில் காந்தி, இந்தியர்களுக்கு மட்டுமல்ல;முழு ஆசிய மக்களுக்குமே தன் மான உணர்ச்சியை உண்டாக்கிவிட்டார் என்று கூறினார்.

திருவாளர்கள்மோத்தா,பெரிசுந்தரம், ராஜமாணிக்கம் முதலிய பலர் பேசினார்கள்.

இந்திய இசைஞானி டிலிப் குமார் ரேய் தேசிய கானங்கள் பாடினார்.

ரக்குவானையில்

ரக்குவான், அக். 3

உலகம் போற்றும் உத்தமர் மகாதமா காந்தியின் 79-வது ஜெயந்தி விழா ரக்குவான் இலங்கை இந்தியர் தொழிற்சங்க சார்பில் கடந்த 2-10-47ல் சென் ஜோன் பாடசாலை மண்டபத்தில் திரு. ஏ. சுப்பையா அவர்கள் தலைமையில் நடைபெற்றது மூவர்ணக் கொடிகளும், தோரணம், வாழைகமுகு முதலானவைகளும் மண்டபத்தை அலங்கரித்தன. மாலை 4 மணிக்கு மேளம், உறுமி, தம்புறு, தப்பு முதலிய வாத்தியங்கள் முழங்க வெடிகள் அதிர ஜெய கோஷம் வானைப்பிளக்க புலி வேஷம், பொய்க்கால் குதிரை, நாட்டியம் முதலிய வேடிக்கைகளோடு மகாத்மாவின் உருவம் வைக்கப்பட்ட அழகிய இரதம் ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டது. இ. சின்னையா அவர்களின் சுதந்திர கீதத்துடன் கூட்டம் ஆரம்பமாயிற்று. உத்தியோகஸ்தர்களும், பிரமுகர்களும், தொழிலாளர்களுமாக பெருந்திரளானோர் கூடடத்திற்கு விஜயம் செய்திருந்தனர். தொழிற் சங்கப் பிரதிநிதி திரு ஜே ஜே எம் [illegible] அவர்கள் வரவேற்புப் பேசினார். திரு. ஏ. சுப்பையா பிரசங்கம் செய்தார். தலைவர் மகாதமாவின் அரிய போதனைகளையும் வாழ்க்கை முறையையும் பற்றி நீண்டதோர் சொற்பொழிவாற்றினார். திருவாளர்களான: ஏ. வ. எஸ். மணியம், வி டி. ஜி. கருணாரத்ன, என். கே நாயர், ஜனாப் அகமத் முதலியோரும் மகாதமாவின் வாழ்க்கை தத்துவங்களைப்பற்றி சொற்பொழிவுகள நிகழ்த்தினர். கடைசியில திரு. எம். ராமசாமி பண்டாரம் அவர்கள் வந்தனோபசாரம் கூறினர் மற்றும் ஓமல, மாதபுலை, சினனத் தோட்டம, ராஜாதமோட்டம, பாலங்கோடை முதலிய இடங்கள்லும விழா சிறபபாகக கொண்டாடபபடடது. (ந-நி)

நாவலப்பிட்டியில்

நாவலப்பிட்டி, அக். 2

மூக்கிலாஞ்சேனை தோட்டம், இலங்கை இந்திய காங்கிரஸ் பொதுக் கூட்டம், மகாத்மா ஜெயந்தியை முன்னிட்டு, தலைவர் திரு. அ. பொ. பெரியாப்பலை அவர்களின் தலைமையின் கீழ் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவலில கூடி, தொண்டர் படைத் தலைவர் திரு. வி. வேலு அவர்களால் வெகு சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட சபபரத்தினுள், வையகததை வாழ்விக்க வந்த உத்தமன் காந்தஜீயின் உருவச்சிலையும், சீல மிகுந்த நமது வீரன ஜவஹர்லால் நேருவின் சிலையும், வங்காளச் சிங்கம் சுபாஷ் சந்திரபோஸன் சிலையும் அலங்கரிக்கப்பட்டு ஊர்வலம் வந்தது. திரு. அ. பொ சுப்பையா, திரு வி. பெரியசாமி, திரு கா. சினனததம்பி, மாதர்சங்கத் தலைவி ஸ்ரீமதி பி. பூ சியமமாள் இனனும பல பிரமுகர்கள் காந்தஜீயின் ஜீவிய சரித்திரததைபபறறி பேசினார்கள. திரு நா. மாரிமுத்துவால் தேசியகீதம் பாடப்பெறறது

சிங்கப்பூரில் காந்தி ஜெயந்தி

சர்வ சமூகத்தினரும் விழாவில் கலந்தனர்

சிங்கப்பூர், அக். 3

மலேயாவில் இந்தியர் வசிக்கும் ஒவ்வோர் வீதியும், தோட்டமும நேற்று காந்தி ஜெயந்தி விழாவைச் சிறப்பாகக் கொண்டாடியது.

சிங்கப்பூரில் 27 பொது ஸதாபனத்தினர் ஒன்று சேர்ந்து ஒரு மாபெருங்கூட்டத்தை நடததினர்கள. அதில் பல சமூகங்களைச் சேர்ந்தவர்களும் மகாத்மாவுக்குப் புகழ்மாலை சூட்டினார்கள். காந்திஜிக்கு நீடிததாயுள் தருமாறு பிரார்ததனைகள் நடத்தப்பட்டு வாழ்ததுக்களும் கூறப்பட்டன.

பொதஜன உறவு இலாகா டைரக்டர் தொமஸன் பின்வருமாறு குறிப்பிட்டார்;-

"யுத்தமா, சமாதானமா என்பது ஆசிய மண்ணிலேதான் நிர்ணயிககப்படும். ஆசியாவையும் அதன் பிரச்னைகளையும் தனது பிரச்னைகள் போல் உலகம் படிக்க வேண்டும். காந்திஜி இப்புது ஆசியாவின் சின்னமாக விளங்குகிறார். அவர் இன்று உலகப் பிரமுகர்; அதற்குக் காரணம் இன்று இந்தியாவையே உலகம்உற்று நோக்குவதேயல்லாமல் காந்திஜி மேல் நாட்டுக்குப் போனதால் அல்ல."

இந்தோனேஷிய அயல் நாட்டு மந்திரி சபையின் பிரதம காரியதரிசி ஒபட் டோயோ "மகாத்மா காந்தியின் இலட்சியங்களை இந்தோனேஷிய மக்களின் ஆதரவுக்காளானவை" என்று தெரிவித்தார்.

சீனப் பிரமுகர் சீ சீ டான் காந்திஜி தலைமையில பயிற்சி பெறும் இந்தியர் மலேயா சுதந்திரப் போராட்டத்திலும் முன்னணியில் நிற்பார்கள் என்று குறிபபிட்டார்.

மேற்படி விழாவின்போது சிங்கப்பூர் இந்தியர்கள், இந்தியப் பிரதிநிதி திரு. திவிக்கு தம நல்வாழ்ததைத் தெரிவிததது ஓர் உபசாரப் பத்திரமும் வாசிததளித்ததார்கள்.

ஆசிரியருக்குக் கடிதங்கள்

உண்மை தெரிந்தது

தேர்தல் காலங்களிலே சில சந்தர்ப்ப வாதிகள், தான் தோன்றிக் தலைவர்கள் தாங்களும் பாராளும் மன்றத்தில் பிரதிநிதியாவதற்காக எத்தனையோ விதமான பொய்ப் பிரசாரங்களைச் செய்தார்கள். தமிழ்க் காங்கிரசையும் அதன் தலைவர்களையும் தூஷித்தார்கள் தமிழ்க் காங்கிரஸ் ஒரு வகுப்பு வாதக்கட்சி. அதில் சண்டி எடுத்த வேளாளர்க்கு மாத்திரமே இடம் உண்டு, அது தாழ்க்கப்பட்டோருக்கு, ஒரு வித பயனையும் கொடாது. என்று மேடைதோறும் நின்று தாக்கடித்தார்கள். அதனை ஒரு சிலர் மாத்திரமே ஏற்றுக்கொண்டார்கள். செல்ற சில இனங்களுக்குமுன்பு தமிழ்க் காங்கிரஸ் நிறுவிய தூதுக்கோஷ்டியொன்று மேதகு கவர்னரிடம் தூது சென்றது யாவருக்கும் தெரிந்த விஷயம், அங்கு ஒரு மணித்தியாலத்திற்கு அதிகமாக கவர்னருடன் தாழ்க்கப்பட்டோர் சார்பாக பிரதிநிதிகளை இரு சபைகளிலும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று தூதுக் கோஷ்டி பேசியது யாவருக்கும் தெரிந்ததே. மேற்கூறியவாறு வேளாளருக்கு மாத்திரமல்ல, தமிழ்ப்பேசும எச்சாதி மக்களுக்கும, விடுதலை பெறுவதற்காக ஸதாபிக்கப்பட்டது தமிழ்க் காங்கிரஸ என்பதை அதன் தலைவர்கள் எடுத்துக் காட்டியுள்ளார்கள். இது போன்றே வருங்காலங்களிலும் தமிழ்க் காங்கிரஸ தாழ்ததப்பட்டோர் விஷயமாக கூடியவரை தொண்டாற்றும் என்பது எமது நம்பிக்கை. ஆகவே நம் சமூகத்தின் விடுதலைக்கும், நாட்டின் பூரண சுயராஜ்யத்திற்கும், உயர்ந்தசாதி,தாழ்ந்த சாதி, என்ற பாகுபாடின்றி தமிழ்க் காங்கிரசுடன் ஒததுழைபபதே மேல் அமெரிக்காவில் ஐ தேஸதாபனததில் விஜயலட்சுமி பண்டிட் கூறியதை பொது மக்கள் கவனிக்க வேண்டும்:- "எல்லோரும் ஓரினம்; எல்லோரும் ஓர் குலம்; எல்லோரும் இவ்வுலக மன்னர்கள்"

ஞாபகப்படுத்துகிறோம்

சோல்பரி அரசியல் திட்டம் இலங்கைக்கு வந்தகாலததில், சிறுபான்மை மக்களுக்கு பாதகமாகவும், ஐ. தே. கட்சிக்கு சாதகமாகவும, த. கா. எதிராகவும, சில தமிழ் போலித் தலைவர்கள் அதனை ஏற்று, அதற்குகைச் சாதபிட்டதன் பலனை, ஏழைப் பொது ஜனங்கள் தற்போதைய தேர்தலிலே எடுத்துக்காட்டிவிடடார்கள். பேராசிரியர் திரு ஸி. சுந்தரலிங்கமும், மன்னாரில் சர்க்கார் உதவி ஏஜெண்டாக இருந்த ஸி. சிற்றம்பலமும், தமிழ் சாதியை ஒதுக்குவதற்கு முற்பட்டிருக்கும் யூ. என். பி சர்ககாருடன் சேர்ந்து மந்திரிபதவி வகிப்பது யாவருக்கும் தெரிந்த விஷயம் திரு சுந்தரலிங்கம் சுயாதீனமாக தேர்தலில் போட்டியிட்டவர் யாழ்ப்பாணததிலே யூ என் பி சமசமாஜி முதலிய கடசிகளின் கூட்டங்களிலே த. காங்கிரசையும், தலைவர்களையும் தூஷிததுப் பேசியவர் யூ. என். பியில் அவர் சேர்ந்ததையிட்டு தமிழ்ப் பொது மக்களுக்கு அவ்வளவு வேதனையில்லை. ஆனால த. கா. தலைவரினதும் இதர காங்கிரஸ் அனுதாபிகளினதும் உதவியால் பாராளுமன்றததை எட்டிப் பிடிததத திரு சிற்றம்பலம் யூ. என். பி மாயவலையில் சிகியது, திரு. நடேசன் தமிழ்க் காங்கிரசுடன் நீண்டகாலம ஒததுழைததுப் பின், சோல்பரி அறிகைக்குகைச்சாத்திட்டது போல் இருக்கின்றது. திரு சிற்றம்பலம் செய்த திருவிளையாடல் காங்கிரசின் கீழ் ஒன்றுபடடு வாழும் பொதுமக்களுக்கு, ஏமாற்றத்தைக் கொடுததிருக்கிறது. ஆகவே, பொது மக்களே! இனி வருங்காலங்களில், தமிழ் சமூகத்திற்கு கேடு விளை விககக் கூடியவகையில், எபபிரதிநிதிகளும் நடந்தால் அவர்களை உங்களுக்கு சமயம் வரும்போது, அவர்கள் செய்த குற்றங்களை எடுகதுச் சொலலுங்கள் நல் வழியில் திருப்புங்கள். இல்லையேல சரியான பாடம் கற்பியுங்கள் பாமர மக்களே விழிபுடன் இருங்கள். காலம் வரும்.

"தன்னலப் பேய் பிடித்த

தமிழர்வள்ளல் ஜாம்வாளார்

என்னும் ஓர் கேலி
வார்த்தை—தமிழா
இன்னும் ஒழியாதோடா"

த சிதம்பரநாதன்

இணுவில் கிழக்கு,
5-10-47.

மன்னார் பிரதிநிதி

ஐயா,

மன்னார் வாசிகளால் வெகு மதிப்பாகத் தெரியப்பட்ட திரு சிற்றம்பலம் எங்களுக்கு இவ்வித துரோகம் செய்வாரென்று நாங்கள் கனவிலும் நினைக்கவில்லை.

உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்த உததமர் போன்று நாங்கள் கிடந்து நாலா வழியாலும் சீரழிந்து கண்கலங்க திரு சிற்றம்பலம் பார்லிமெண்டிலே பதவி பெற்று பவிசு கொண்டாட எண்ணிவிட்டார்.

ஐயா, சிற்றம்பலவரே! நீர் யூ. என் பி சேனநாயக்கா திரித்த கயிறுக்கு எடுபட்டு விட்டதையிட்டு வெகுவாகத் துக்கிக்கிறோம்.

"காரியம் முடியுமட்டும் கழுதையும் கால் பிடிக்கும்" என்ற பொய்யா மொழி உம் மீதே கண்டு விட்டோம். நீர் இவ்விதம் செய்ததையிட்டு நாங்கள் கோடி நமஸகாரம் செய்கிறோம். மறு முறை அங்கத்தினராய் வர நீர் மதிகெட்டு மன்னார் பக்கம் திரும்பாதிருக்குமபடி தலையில் மண்ணை வாரிப் போட்டுக் கொண்டீர்.

இப்படிக்கு,
மதிகெட்ட மன்னார் வாசி.
சின்னக்கடை,
மன்னார். 2-10-47

(2)

மன்னார் பட்டினத்திலும் மற்றும் நாட்டுப்பகுதிகளிலும வசிக்கும் ஏழைத் தமிழர் முஸ்லிம்களுடையவாக்குரிமையைப் பெற்று பாராளுமன்றத் தேர்தலில வெற்றி எடுத்த மன்னார் மந்திரியை மன்னார் வாக்காளர் வாழ்ததுகிறார்கள் என்றுதான் சிற்றம்பலம்துரை அவர்கள் நினைக்கக் கூடும். அப்படி இல்லை. அவரைத் தூற்றுகிறார்கள். ஏன் அவர் செய்த பிழை என்ன? ஏன் அவரைத் தூறறவேண்டும்? காரணம் அவர் யூ. என். பி. கட்சியில் சேர்ந்து தமிழருக்குவிரோதமாகக்காரியங்கள செய்யமுற்பட்டு மந்திரிப்பதவி அடைந்து இருக்கின்றபடியால்தான்! தமிழராகிய மன்னார் வாக்காளரை ஏமாற்றினமாதிரி அல்லவா காரியங்கள் செய்திருக்கிறார். கனவிலும் மன்னார் தொகுதி வாக்காளர் சிற்றம்பலம் தந்திரி யூ என் பியில் சேருவார் என்பதை நினைக்கவில்லை இப்பொழுது இவர் ஒரவர் சேனநாயக்கா பார்ட்டியில் சேர்ந்தாலும் மன்னார் வாக்காளருக்கு கவலை இல்லை. ஏன் இந்த பதினான்கு மந்திரிமாருடைய நாட்டு வளப்பங்களையும் உடைத்து எறிந்தான் இப்பொழுது தமிழ் காங்கிரஸ் கட்சி, சமசமாஜக கட்சி, சுயேச்சைவாதிகள், பொல்ஷிவிக்லெனின் கட்சி, இந்தியன் காங்கிரஸ கட்சி தலைவர்கள் கடுகணங்கட்டியிருக்கின்றார்கள். என்ன ஐயா தமிழ் காங்கிரஸ் தலைவர் ஸ்ரீமான் ஜீ. ஜீ பொன்னம்பலம் அவர்கள் இந்த மன்னார் பட்டினததிலே வந்து சிற்றம்பலத்துக்காக வேண்டி உழைததது வீடுவீடாகத் திரிந்து ஊர் ஊராகச் செய்த லெகசர்கள எம் காதில் இப்பொழுதும் கேட்கின்றது. இப்படிச் செய்த ஸ்ரீ ஜீ ஜீ. பொன்னம்பலததையும் கவனியாது அவர் செய்த தொண்டையும் மறந்து இப்படி ஒரு அற்ப உத்தியோகமாகிய தந்திதபால் மந்திரியாகப்போய் இருக்கிறார் திரு. சிற்றம்பலம். இரு தமிழ் மந்திரிமாருக்கும் இடைததுருக்கும் உத்தியோகததை தமிழரே உணர்ந்து பாருங்கள் சிற்றம்பலம்துரை அவர்கள் வெறறி அவருடைய வெற்றி அல்ல. ஏழை ஜனங்களாகிய மன்னார் தொகுதி வாக்காளராகிய எங்களுடைய வெற்றியும ஸ்ரீமான் ஜீ ஜீ பொன்னம்பலததினுடைய வெற்றியும்தான் ஜீ ஜீ பொன்னம்பலம் வராமல் இருந்தால் தெரியும் சிற்றம்பலம் துரை அவர்கள் வெறறி எடுப்பதை சிற்றம்பலம் துரை அவர்களின் வெற்றிக் கொண்டாட்டததுக்கு மன்னார் தொகுதி வாக்காளர் அவர்களில் லததில் அணிமலர் மாலைகளும் வேண்டி வைததவர்களுடைய பாடெல்லாம் வீணதான். சிற்றம்பலம்துரைவெற்றசொன்ன 14-ம் தேதி இரவேபோய் விட்டார். தமிழர் அவர்மீது வைத்த நம்பிக்கையை மோசஞ் செய்துவிட்டார்.

இங்ஙனம்,
எஸ். எல் வீ. நாதன்.
மன்னார், 3-10-47.

நசுக்கபபட்ட நாடுகளுக்காகப் போராடுவது ரஷியாவே

(1-ம் பக்கத் தொடர்)

லந்து, ஹாலந்து, நார்வே, சுவீடன், சுவிட ஜர்லந்து நாடுகளிலுள்ள கமியூனிஸ்ட் கட்சிகளுக்கு ஏன் அழைப்புகள் அனுப்பப்படவில்லை என்ற காரணத்தைத் தெரிவிக்கும் செய்தகள் வார்சாவிலிருந்து இங்குள்ள பத்திரிகைகளுக்குக் கிடைக்கவில்லை.

அமெரிக்காவின் சுதி இறங்குகிறது

நியூயார்க், அக் 5

கிரீஸ சம்பந்தமாக யூகோஸ்லாவியா, அல்பேனியா, பல்கேரியா முதலிய பால்கன் எல்லை நாடுகள் ஆக்கிரமிப்பு செய்வதைப் பலமாகக் கண்டித்து ஐக்கிய தேச அசெம்பிளியில் அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தின் தீவிரப் போக்கை அமெரிக்கா குறைத்துக் கொள்ள முன் வந்திருக்கிறது.

அமெரிக்காவின் புகாருக்கு மேற்கு ஐரோப்பிய நாடுகளின் உருப்படியான ஆதரவுகூடக் கிடைக்கவில்லை சோவியத்ரஷியாவையும் அராபிய நாடுகளையும் தவிர இதர நாடுகள் பால்கனில் நிரந்தர கமிஷன் நியமிப்பதுபற்றி பின்னிருந்துதான் ஆதரவளிக்கின்றன.

இக்காரணங்களைத் தெரிவித்த அசெம்பிளி தலைவர், அமெரிக்காவும் ரஷியாவும் தங்கள் தகராறுகளின் தீவிரப் போக்கை மடடுப்படுததும்படி உபதேசித்தார். இது சம்பந்தமாக பல்கேரியபிரதமர் டிமிட்ரோவ் அமெரிகக அந்நியநாட்டு மந்திரி மார்ஷலுடன் தனிததது வெகுநேரம் பேசியதன் பயனாக, மார்ஷல் அசெம்பிளியில பேசியபோது தனது தீவிரபபோக்கை மட்டுப்படுததியே பேசினார்.

மாஸ்கோ அமெரிக்க ஸ்தானிகர்

மாஸ்கோ, அக் 5

அமெரிக்க சர்க்காருடன் கலந்து பேசுவதற்காக மாஸ்கோவிலுள்ள அமெரிக்க ஸ்தானிகர் எமிக் விமான மார்க்கமாக வாஷிங்டனுக்குப்பயணமானார். போகும் வழியில் அவர் பெர்லினில் இறங்கி அக்கிருக்கும் அமெரிக்க ராணுவத் தலைவர் ஜெனரல் கிளேயையும் அழைததுக் கொண்டு செல்வார். இயமாதக் கடைசியில் ஸ்மித் மாஸ்கோவுக்குத் திரும்பி வருவார்.

ஐரோப்பாவுக்கு அமெரிக்க உதவி

வாஷிங்டன், அக் 5

மார்ஷல் திட்டப்படி அமெரிக்கா, ஐரோப்பாவுக்கு உதவி செய்ய வேண்டுமானால் அமெரிக்க காங்கிரசைச் சேர்ந்த நான்கு கமிட்டிகள் அனுமதி அளித்தாக வேண்டும். அவைகளில் ஒன்றான செனட்சபை உததேசக் கணக்குக் கமிட்டி, மாரிகாலத்தில் 58 கோடிடாலர் மேற்கு ஐரோப்பியநாடுகளுக்கு இடைக்கால உதவி செய்ய வேண்டுமென்று ட்ரூமன் விடுத்த கோரிக்கையைப்பற்றி ஆலோசிக்க நவம்பர் 18-ம்தேதி கூடுகிறது.

உணவு சேகரிப்பு பிரசாரம்

ஐரோப்பா பட்டினியால் அதோகதியாகப் போய்விடாதுகாக்க அமெரிக்கன் உணவுப் பொருட்களை வீண் செலவு செய்யாது மீதப்படுததி சேகரித்து ஐரோப்பாவுக்கு அனுப்ப வேண்டுமென்று அமெரிக்க சர்க்கார் பிரசாரம் செய்து வருகிறார்கள் அதையொட்டி இனறு ஜனாதிபதி ட்ரூமனும் அந்நியநாடுமந்திரி மார்ஷலும் ரேடியோவில பிரசங்கங்கள் செய்தார்கள். விவசாய மந்திரி ஆண்டர்ஸனும் பேசினார் இந்த ரேடியோப் பிரசங்கததற்கு டெலிவிஷன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. வெள்ளை மாளிகையிலிருந்துடெலிவிஷன் ரேடியோ பிரசங்க ஏற்பாடு இதுவே முதல தடவையாகும்.

ஆதரிப்பவர் போல் நடித்து மோசஞ் செய்தாரா?

தோல்வி அடைந்த பார்லிமெண்ட் அபேட்சகர் கூறும் விபரம்

நுவரெலியா, அக். 6

மத்துரட்டத் தொகுதிக்குப் போட்டியிட்டுத் தோல்வி அடைந்த பார்லிமெண்ட்அபேட்சகர் எட்மண்ட் குணவர்த்தனமீது ரூ 8230 கோரி இடபிள்யூ.அபயகுணசேகராவால் ஓர் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. திரு அபய குணசேகரா நுவரெலியாப் பகுதிக்குப் பிரதிநிதியாக ஒரு சமயம் அரசாங்கசபை அங்கத்தினராக விலங்கியவர் ஆவர்.

மேற்படி வழக்கில் திரு. அபயகுணசேகரா தாம் திரு. குணவர்தனவுக்குத் தேர்தல்வேலை செய்ததாகவும் அதன் பயனாக தமக்கு மேறகுறித்த தொகை செலவாகியிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். அவர் சமர்பித்துள்ள கணக்கு விபரங்கள் பின்வருமாறு:-

ரூ. 4000 அவரை ஆதரித்து வேலை செய்ததற்குச் சம்பளம்

ரூ. 925 நோட்டீஸகள் போன்ற பலவித அச்சுச் செலவு.

ரூ 3125 கூட்டங்கள் நடத்திய செலவு-சிற்றுண்டிச் செலவு.

தமது மாமியார் வளவில் தேர்தல் வேலை நடத்த அனுமதித்ததற்கு வாடகை.

திரு. குணவர்தன தமது பதிலில் திரு. அபயகுணசேகராவைக் தாம் அணுகித் தமக்கு வேலை செய்யும்படிக் கேட்டது உண்மை என்றும் ஆனால் அவர் தம்மை ஆதரிப்பவர்போல் வெளிக்கு நடித்து மோசம் செய்துவிட்டார் என்றும் குறிப்பிடிருக்கிறார். மேலும் திரு. அபயகுணசேகரா செய்துள்ளதாகக் குறிப்பிட்டிருக்கும் செயல்கள் தேர்தல் சட்டத்திற்கு மாறானவை என்றும் வழக்கைச் செலவுக்காசோடு தளளுபடி செய்யுமபடியும் கேட்டுள்ளார்.

இடதுசாரிக் கட்சியினரை அடித்த இன்ஸ்பெகடருக்கு ரூ. 15 அபராதம்

அனுராதபுரம், அக். 6

அனுராதபுரி தேர்தலில் ஒரு சமசமாஜி அபேட்சகரை ஆதரித்த டபிள்யூ. ஆர். ஹென்றி என்பவரை, அனுராதபுரி போலிஸைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் லொவல் என்பவர் தாக்கியதற்காக ரூ. 15 அபராதம் மாஜிஸ்டிரேட்டால் விதிக்கப்பட்டார்.

இன்ஸ்பெக்டர் லொவல் ஒரு சாரமும் பெனியனும் உடுததியபடி இடது சாரிக் கட்சி அபேட்சகர் திரு. ஏ. குணசேகரா பெடரோல் எடுத்து தனது ஊழியர்களுக்குக் கொடுகதுக் கொண்டு நின்ற பெடரோல் குததத்தண்டை வந்து அவர்களைத் தாக்கினாராம்.

இன்ஸ்பெக்டர் லொவல் தாம் அப்படித் தாக்கவில்லையென்றும் அங்கு குழுமியிருந்தவர்களைக் கலைததததாகவுமே கூறினார்.

அபாயகரமான குற்றவாளி

100 கான்ஸ்டபிள்கள் தேடியும் பிடிக்கவில்லை

கொழும்பு, அக் 7

வீடு உடைத்துக் களவெடுக்கும் ஒரு பயங்கரமான குற்றவாளியாகிய காரா அல்லது சரதியல் என்பவனை நேற்று மாலையில், கொட்டாவா போலிசைச் சேர்ந்த மலாபலா என்னுமிடத்தில் நூற்றுக்கதிகமான போலிஸ் கான்ஸடபிள்கள் தேடித் திரிந்தனர்.

கொழும்புப் போலிஸிலிருந்து 75 கான்ஸ்டபிள்களும் அவனைத் தேடுவதில் பங்குபற்றினர்.

காராவிடம் இரண்டு மெஷின் துப்பாக்கிகளும் ஒரு சுழல் துப்பாக்கியும் இருப்பதாகக் கூறப்படுகிறது.

கிரில்லப்பொனையிலிருந்து அவிசாவளை வரைக்கும் ஆவன் தனது திடீர் கொள்ளைகளை நடததிவந்தான் என்றும் அறியப்படுகிறது

காராவுக்கு வயது 25. நேற்று மூன்று பகுதிகளாக அவனைத் தேடியும ஆள் பிடிபடாமல் தப்பிவிட்டானாம்.

குமாஸ்தாவின் தற்கொலை

கனவுகளால் ஏற்பட்ட மனக்குழப்பமேகாரணமாம்

கொழும்பு, அக். 6

கூட்டுறவு இலாகாவில் வேலைசெய்துவந்த வெள்ளவத்தை ராஜசிங்க ரோட் வாசியான இ. தேவதாசன் என்ற இளைஞன் கடலில் மூழ்கித் தற்கொலை செய்து கொண்டான்.

இவ்விளைஞனின் கனவுகளில் அவனது காலஞ்சென்ற தந்தையார் தோனறி வந்ததாவும், ஆபீஸ தளதாவேஜுகளை அவர் இழுததெடுப்பது போன்றதோற்றம் ஏற்பட்டதாகவும் அதனால்அவனது உள்ளமே சிலகாலமாக குழபிப் போயிருந்ததால் அவன தற்கொலை செய்து கொண்டிருக்க வேண்டும் என்றும் நம்பப்படுகிறது

இக் கனவு கண்ட அந்நாட்களில் அவன் கோயில்களுக்குச் சென்று பூஜைகள நிகழ்ததி வந்ததாகவும தெரிகிறது.

சென்றதிங்கடகிழமை இரவு போஜனததின் பினனர் மேற்படி யுவன் வீட்டில் இருந்து புறப்பட்டுச் சென்றதாகவும் பின் திரும்பவில்லை என்றும் தெரிகிறது. இரண்டு மூன்று நாடகளின பினனர் அவன் உடல் கடறகரை அருகே நீரில் மிதக்கக்காணப்பட்டது.

மரண விசாரணைசெய்த அதிகாரி மனம் குழமபிய நிலையில் அவன் தற்கொலை செய்ததாகத் தீர்பபுக் கூறினர்.

கிரவுன் தியேட்டர் ஸ்கின்னர்ஸ ரோட் மருதானை
தினசரி மாலை 6-15, இரவு 9-30 மணிக்கும்
சனி ஞாயிறு மெட்னி 3 மணிக்கும்.
சித்திரகலாவின் உன்னத தயாரிப்பு!
"தாய் நாடு" தமிழ் படம்
வெற்றிகரமான 3-வது வாரம்!
அடக்கு முறைகளுக்கு ஆட்பட்டிருந்த மக்களின் மீட்சிக்காகவும் தாய்நாட்டின் விடுதலைக்காகவும் நடக்கும் போராடடகளைக் கொண்டது.
மெட்ரஸ் மெயில் புகழ் புதிய நடிகை
பாடலிங்மணி சுந்தரி
மற்றும் பலரும் சிறப்புடன் நடித்தது
பெண்களுக்கும் சிறுவர்களுக்கும மெட்னியில் பால்கனிக்கு அரைசார்ஜ் எடுக்கப்படும்.

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ லிமிட்டெட்டிற்காக, 1947-ம் வருஷம் அக்டோபர் மாதம் 7-ம் தேதி இப்பத்திரிகை 194 ஏ, தட்டாரத் தெரு, கொழும்பு சுதந்திரன் அச்சுக் கந்தோரில் அச்சிட்டு கொழும்பு மெயின் ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் படராசா அவர்களால் வெளியிடப்படுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org